# சுவைத்திரள்

# SUVAITHIRAL

சுவைத்திரள் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

சுவை 29 மலர் 14 மாசி பங்குனி 2008




சுவைத்திரள் ஓர் உலக நகைச்சுவை, பல்கலை ஏடு. இது மட்டக்களப்பிலிருந்து வெளி வருகின்றது.

மக்கள் பிரதி
மட்டக்களப்பில்
ரூபா 30/=

விசே
பிரதேச சபைகட்கு
தபால் செலவுடன்
ரூபா 100/=

மக்கள் பிரதி
பிறமாவட்டங்கள்
ரூபா 50/=

ஐரோப்பாவில்
3 யூரோக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மழை வருவது மயிலுக்குத் தெரியும்.



சீனி இருக்குமிடம் எறும்புக்குத் தெரியும்.



கள்வன் யார் என்பது துப்பறியும் நாய்க்குப் புரியும்.



எப்படித் தப்புவது நரிக்கே தெரியும்.



**கையடக்கத் தொலைபேசி திருத்துவது சூரியாவுக்கே தெரியும்!**

# DIPLOMA IN MOBILE PHONE REPAIRING COURSE

### *SOFTWARE HARDWARE THEORY*

- i Phone Spares
- ii phone இல் காணப்படும் IC வகைகள்
- iii Spares பழுதினால் தோன்றும் பழுதுகள்
- iv IC பழுதடைவதனால் Phone இல் தோன்றும் பழுதுகள்
- v Trouble Shooting I
  Trouble Shooting I
- vi IC களை நேரடியாக மாற்றுவதன் மூலம் பழுதுகளை நிவர்த்தி செய்தல்
- vii ஒரு Model இல் இருந்து இன்னொரு Model க்கு ஒத்துப் போகும் IC வகைகள்
- viii Software, Hardware இல் ஏற்படும் பழுதுகள்
- ix Software codes
- x Service Diagram ஐ பயன்படுத்தி IC களை கண்டறிதல்

### *HARDWARE பயிற்சிகள்*

- i Battery Voltage அளவிடும் பயிற்சி
- ii Battery க்கு Quick charge வழங்குதல்
- iii Phone கழற்றும் முறை
- iv Phone களை Service செய்யும் முறை
- v Phone Charging Testing
- vi Phone motherboard இல் காணப்படும் Resistors Capacitors மாற்றும் பயிற்சி
- vii IC களை மாற்றும் பயிற்சி
- viii Key pad L.E.D மாற்றும் பயிற்சி
- ix Spares களை மாற்றும் பயிற்சி (Switch, display Ribbon ஒட்டுதல்)
- x Hot Gun பயன்படுத்தும் பயிற்சி

### *SOFTWARE பயிற்சிகள்*

- i Software Introduction
- ii Software Installation
- iii Unlocking (Lock உடைத்தல்)
- iv Software Updates (flashing)
- v Un Limitted Video
- vi MP3 Player
- vii New Various
- viii Games, Images, Songs phone க்கு போடுதல்
- ix Memory card reader / writer Introduction
- x Blue Tooth மூலம் Computer ல் இருந்து Phone க்கு Pictires, Tones போடும் முறை
- xi படங்கள், பாடல்களை Convert செய்யும் பயிற்சி

(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளுங்கள்)

**பயிற்சி நெறியின் முடிவில் தனியாகவே தொழில் தொடங்கும் வகையில் பயிற்சியளிக்கப்படும்.**



**விரிவுரையாளர்**

நாடு பூராகவும் பல நூற்றுக்கணக்காக Phone திருத்துனர்களை உருவாக்கிய கௌரவ Dr. Sooriyakumar அவர்கள்

## FULL TIME COURSE

~~10,000/=~~ 5250/=

# SOORIYA TECHNICAL INSTITUTE

No.87, 2nd Floor, Jampettah Street, Colombo 13, Tel: 0114932681, 0773235354


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்குரல்




# மலேசியத் தமிழனுக்கு.... இதோபதேசம்

அன்புள்ள மலேசியாத் தமிழனுக்கு சிலோன் தமிழன் மதுராஜன் எழுதிக்கொள்வது; மலேசியாவில் ஹெலிகொப்டர்கள் இந்துக் கோயில்களுக்கு மேலால் பறந்து பூச்சொரிகின்றன. இது வருடாவருடம் நடக்கும். இப்போது கோயில்கள் இடிக்கப்படுவதாகக் கேள்வி. இலங்கை இனப்பிரச்சனையில் தோல்வி யடைந்து விட்டதாகவும், தாம் உயர்ந்து விட்டதாகவும் அடிக்கடி அறிக்கைகள் வெளிவருவதும் உண்டு.

அறிக்கைகள் எவ்வாறு வெளிவந்தாலும் இப்போது இந்தியாவில் குடியேறிய தமிழன் பால் அடிதடிகள் நடக்கின்றன. சமத்துவம் கேட்டு பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மலேசியத் தமிழர்கள் அடியுண்டு, மிதியுண்டு, சிறையுண்டு வாழ்வதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. பிரதான சிறுபான்மைத் தமிழ்த் தலைவர்கள் ஈப்போவில் சிறைவைக்கப்பட்டுள்ளனர். சாதாரண சிறையல்ல சுருக்கமாகச் சொல்லப் போனால் பயங்கரவாதத் தடைச்சட்டச் சிறைதான். இரண்டு வருட காலத்துக்கு நடவடிக்கை எதுவும் எடுக்க முடியாத சிறைதான்! சமத்துவம் கேட்டதால் நடைபெற்ற அடிதடிதான்! இதனை விட மலேசியாத் தமிழன் தமிழ் மலேசியா கேட்டதாக நாம் அறியவில்லை. இது இவ்வாறு இருக்க இந்திய பிரதமர் மன்மோகன்சிங் அவர்களும், தமிழக முதல்வர் திரு. கருணாநிதி அவர்களும் மலேசியாத் தமிழர்களுக்காகக் குரல் கொடுக்கத் தயங்கவில்லை. அதே சமயத்தில் இந்தியாவின் குரலுக்கு மலேசியா எச்சரிக்கை விடவும் தயங்கவில்லை.

மலேசியாத் தமிழ் மக்கள் சமத்துவமாக வாழப் பல வழி முறைகளைப் பின்பற்றலாம். அதற்காக பல ஆயிரம் வழி முறைகளைக் கையாளும் திறமை மலேசியத் தமிழ் மக்களுக்கு உண்டு. ஆனால் மலேசியாத் தமிழா ஒன்றும் செய்யாதே இந்தியாவை நம்பி...... ✯

## வள்ளுவன் இன்றிருந்தால்...



"வீடுள்ள மக்களெல்லாம் காணாது போயின் காடுள்ள நாடாகும் காண்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயபுராணம்

சுவைத்திரள் - 1993ம் ஆண்டில் இருந்து வெளிவரும் நகைச்சுவை இதழ் (உலகச் சஞ்சிகை) அச்சடிக்கப் படும் பிரதிகள் ஆயிரம்

**சுவைத்திரள் செய்திக் பத்திரிகையாக 1993ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டது.**


✧தபால் விலாசம் : இல.28/5 அம்பாள் லேன், மட்டக்களப்பு.

✧தொ. பே. இ : 0779004811

✧எமது பிரதான விநியோகஸ்தர் : திரு. V.நவமோகன், காயத்திரி பப்ளிக்கேசன், 1A றூபன் பீரிஸ் மாவத்தை, களுபோவிலை, தெகிவளை. தொ.பே.இல - 011-2727621.

✧ஆசிரியர் : இலக்கியச் சுடர், திக்கவயல்.சி.தர்மகுலசிங்கம்

✧ஓவியர் :சுதர்சன், மாமாங்கம்.

✧இலட்சியம் : துன்பப்படுவோன் சிரித்து மகிழல்.

✧சந்தா : ஏற்கப்பட மாட்டாது.

✧கணினி வடிவமைப்பு : சங்கர் . T

✧அச்சுப் பதிப்பு : வணசிங்கா அச்சகம், இல.126/1, திருமலை வீதி, மட்டக்களப்பு, ஸ்ரீலங்கா.


**சுவைத்திரள் பின்வரும் நாடுகளில் விற்பனைக்காக கிடைக்கும்.**

➔பிரான்ஸ் ➔கனடா ➔டென்மார்க் ➔இங்கிலாந்து ➔அவுஸ்திரேலியா ➔நியூசிலாந்து

விலாசங்கள் அடுத்த இதழில் அறியத்தரப்படும்.

## விளம்பரக் கட்டணங்கள்

| | |
|---|---|
| அட்டையின் பின் பக்கங்கள் முழு அளவு | 3000.00 |
| அரைப்பக்கம் உள் அட்டை | 1500.00 |
| முழுப்பக்கம் உள் அட்டை | 2000.00 |
| உட் பக்கங்கள் ஒரு பக்கம் | 1000.00 |

சுவைத்திரளில் வெளிவரும் விடயங்கட்கு ஆசிரியரே முழுப்பொறுப்பு. அவதானமாக எழுதுவது எழுத்தாளர் பொறுப்பு. கொப்பியடித்த பக்கங்கட்கு எமது நன்றிகள்.

சுவைத்திரளின் விலை மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடும். மட்டக்களப்பில் மலிவு விலை ரூ30/= பிற மாவட்டங்களில் ரூ50/= பிரதேச சபைகட்கு, மற்றும் உள்ளூர் நிறுவனங்கட்கும் விசேட பிரதிகள் அச்சாகின்றன. தபால் செலவுடன் அதன் விலை 100/= ஆகும். ஐரோப்பிய நாடுகளில் 3 யூரோக்கள்.

**சுவைத்திரள் நகைச்சுவை ஏடு இன்றளவும் வெளிவருவதற்கு பிரதேச சபைகளும், மாநகர சபைகளும் நகரசபைகளுமே காரணம். அவர்கட்கு எமது பிரத்தியேக நன்றிகள் உரியவை (ஆ + ர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக்கருடன் பதில்கள்



**கே: உதவியை விதைத்தால் அதன் விளைவு உபத்திரவமாக இருக்கிறதே? இதை என்ன என்று சொல்வது?**

ப: நீங்கள் தான் சொல்லி விட்டீர்களே... உபத்திரவம் என்று! நான் புதிசாக என்னத்தைச் சொல்வது?

**கே: இதுவரை ஒருவர் காதலித்து அதை வெளிப்படுத்தாமல் இருந்தால் அதன் முடிவு எப்படி இருக்கும்?**

ப: எரிமலை அவிந்து, அடங்கித் தானாக உடைந்து வண்டல் மண்பரவிய கதையாக அதன் முடிவு இருக்கும்!

**கே: மரபுக் கவிதை, புதுக்கவிதை ஒப்பிடுக?**

ப: கவிதை மரபைப் பேணுவது மரபுக்கவிதை. மரபுக் கயிற்றை மடியில் கட்டியது புதுக்கவிதை.

**கே: இக்காலத்தில் தலையாடாமல் வால் மட்டும் ஆடுகிறதே.. இது எங்கே போய் முடியப் போகிறது?**

ப: பிஞ்சில் பழுத்த இடத்தில்

**தவிர்க்க முடியாத காரணங்களால் கருடனுக்கு கேள்வி கேட்பவர் பெயர் இவ்விடம் இடம்பெறுவதில்லை.**

**கே: இலங்கையில் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்வது எது? வளராதது எது?**

ப: வளர்வது விலைவாசி, வளராதது வாசி விலை.

**கே: வீட்டுக்கு வெளியே போகும் போது இன்பமான காட்சி எது? துன்பமான காட்சி எது?**

ப: வழியில் காணும் சிரிப்பு முகம், இன்பமான காட்சி, வீதியில் இறங்கும் முன்பே ஒரு கையைக் காட்டிப் பிச்சை எடுக்க முயற்சிக்கும் குடிமகனைக் காண்பது துன்பமான காட்சி.

**கே: விலைவாசியைக் குறைக்க நாங்கள் என்ன செய்ய வேண்டும்?**

ப: விலைவாசி குறைந்த நாட்டுக்கு வேலை பெற்றுச் செல்ல வேண்டும்.

**கே: படித்து இருந்தும் பெற்றோரை அவமதிக்கும் பிள்ளைகட்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?**

ப: உங்கள் பிள்ளைகளும் உங்களை விட அதிகம் படித்து, அதிகம் உதைக்கும் காலம் வெகுவிரைவில் என உணர்ந்து கொள்க.

**கே: 'ஏய்' என்னும் ஒரு படம் வந்திருக்கின்றது. படத்துக்கு இனிமேல் வேறென்ன பெயர் வைப்பார்கள்?**

ப: 'கூய்!'

**கே: மரபுக்கவிதைகள் இப்போது பத்திரிகைகளில் வெளிவருவதில்லையே? காரணம் என்ன?**


ப: மரபைக் காப்பதற்கு யாப்பு இலக்கணம் தேவை. யாப்பும், கோப்பும் தெரியாதவர்களால் செய்யப்படும் சோப்பே இப்போது கவிதை. பத்திரிகைகளில் மரபுக்கவிதை வெளி வருவதில்லை என்பது உமது கயிறு திரிப்பு.

**கே: வாழ்ந்தாலும் ஏசும், தாழ்ந்தாலும் ஏசும் - இந்த உலகத்தைப் பற்றி என்ன கூறுகிறாய் கருடனே?**

ப: வாழ்ந்தாலும் போற்றும், தாழ்ந்தாலும் ஏற்றும் என்ற நிலைவரத்தை உலகின் மேல் ஏற்ற எழுந்து வாராய் அதி உத்தமனே...

**கே: வீடு பேறு உடையவர்கள் யார்?**

ப: பொண்டாட்டியை வீடு வாசல்களுடனும், வெறும் காணிகளுடனும் கையேற்ற பெருந்தகைகள்.



**கே: வாழ்க்கையில் உயர்ந்தவர்கள் யார்? உயராதவர்கள் யார்?**

ப: உயர்ந்தவர்கள் வருகின்ற பஸ்ஸிற்குக் கை காட்டுபவர்கள், உயராதவர்கள் போன பஸ்ஸிற்குக் கை காட்டுபவர்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே: இன்று வாழ்க்கையில் திடீரென உயரக்கூடிய உத்தமர்கள் யார்?**
ப: சைபர் கபே அல்லது சைவக் கபே நடத்தக் கூடியவர்கள் விரைவில் உயரக்கூடியவர்கள்.

**கே: எவனுக்கு வாழ்வு விரைவில் அஸ்தமனம் காணும்?**
ப: சுயதொழில் செய்யத் தெரியாமல் ஹிரோயின் பவுடர் கடத்தும் அறிவிலிகட்கு.

**கே: சகிக்கக் கூடியது எது? சகிக்க முடியாதது எது?**
ப: சகிக்கக் கூடியது நீரிழிவு, சகிக்க முடியாதது பேரழிவு.

**கே: மனதை நெருடுவது எது? நெகிழச் செய்வது எது?**
ப: நெருடுவது தாய் படும் வறுமை, நெகிழச் செய்வது மாபெரும் கலைஞனின் வயதான வறுமைக் கோடு.

**கே: மாட்டின் வயதைப் பல்லைப் பார்த்து அறியலாம். மனிதனின் வயதை எவ்வாறு தான் அறிவது?**
ப: அம்பலவி மாம்பழம் வாடும் போது தோல் சுருங்குவதைக் கண்டீரா? அது போன்று தோல் சுருங்குவதைக் கண்டு அறிந்து கொள்க!

**கே: தமிழ் மக்களுக்கு எப்போது தான் விமோசனம் ஏற்படும்?**
ப: சர்வதேசம் ஒரு பக்கப் பார்வை பாராது இரு பக்கப் பார்வை பார்க்கும் போது!

**கே: தமிழ் நாட்டு மீனவர்கள் படும் பாட்டை நினைத்தால் என்ன யோசிக்கத் தோன்றுகிறது?**
ப: இந்தியாவின் ஒரு பகுதியாகத் தமிழ் நாடு இருக்கிறதா என எண்ணத் தோன்றுகிறது.

**கே: அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாள்!?**
ப: அடைக்கும் தாள் இருப்பதனால் தான் அன்பு கூடுகிறதாம்.

**கே: வெள்ளைக்காரனை நம்பலாமா?**
ப: சுண்ணாம்பும் வெள்ளையாக உள்ளது. நாக்கினால் நக்கினால் நடப்பது வேறு! நம்பக்கூடியது நிறத்தில் இல்லை.


**கே: குடும்ப வாழ்க்கையில் குட்டுப்படுபவன் யார்?**
ப: குடும்பத் தலைவன், தனது வீட்டில் தானே ஜனாதிபதி என்பதை மறந்து செயலாற்றுவதால்!

**கே: நள்ளிரவில் சுதந்திரம் பெற்றோம்! நடப்பது என்ன?**
ப: நள்ளிரவில் ஒழிகின்றோம்; நள்ளிரவு விலை உயர்த்தலுக்கு பின்னிரவில் நடுங்குகின்றோம்.



**கே: ஒரு கஸ்டப்பட்டவன் றோட்டில் நடந்து சென்றால் எதைக் கண்டு மயங்குவான்?**
ப: றோட்டில் புதைந்து கிடக்கும் சோடா மூடி இரண்டு ரூபாவாக இருக்குமா என மயக்கம் அடைவான்.


**கே: யார் விரும்பப்படுபவன்? யார் விரும்பப்படாதவன்?**
ப: விரும்பப்படுபவன் குறிஞ்சி மலராய்ப் பூத்தவன், விரும்பப்படாதவன் நெருஞ்சி மலராய் அலர்ந்தவன்.



**கே: இந்தியாவின் வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி, முன்னாள் அமைச்சர் சிதம்பரம் ஆகியோர் அடிக்கடி இலங்கை வருவதால் இனப்பிரச்சனையில் ஏதும் முன்னேற்றம் ஏற்படுமா?**
ப: அவர்கள் சிரித்துக் கதைப்பதில் இருந்தே பிரசவ வேதனை எதுவும் இல்லை என்பதைப் புரிந்து கொள்ளலாம்.



**மாணவி :** "இந்தாங்க டீச்சர் பூ"
**ஆசிரியர் :** "நான் ஊதாப்பூ தானே கேட்டேன். நீ மல்லிகைப் பூ கொண்டு வந்திருக்கிறாயே."
**மாணவி :** "இந்தப்பூவை நான் ஊதல்ல ரீச்சர்."



**முருகன் :** "நான் பால் குடிக்கக்குள்ள பால் புரைக்கடிச்சதால பால்க்காவடி எடுக்கிறன்."
**வேலன் :** "ஆ..! அப்ப சாப்பிடக்குள்ள மீன் முள்ளு தொண்டையில பொறுத்துதெண்டா முள்ளுக் காவடி எடுப்பாயா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பனுக்குப் பின் கவிஞர்கள்





## கண்மணி ராஜம்

சின்னஞ் சிறுகுழந்தை
சிங்காரப் பெண்சிறுமி
என்நெஞ்சு அமுதூற்றும்
இனிமையெங்கு போனதுவோ?

பூப்போலக் கண்கள்,
பூப்போலப் புன்சிரிப்பு.
பூப்போலக் கைவிரல்கள்,
பூப்போலப் பாதங்கள்,

பூப்போலக் கன்னம்,
புதுமின்போல் வளையும் உடல்,
பாற்போர் செவிக்குத்தேன்
பாய்ச்சும் குதலைமொழி.

மாம்பழத்தின் மேனி,
மதி உறிஞ்சும் வட்டமுகம்,
பூம்பருத்தி ஆடை
புனையாத தோகைமயில்.

ஆசைஎலாம் ஓர் உருவாய்.
ஆர்வம் எலாம் ஓர் கனியாய்,
பேசரிய காதல்
பிழம்போர் மதுக்கடலாய்,

சோதி உயிர்சாய்ந்து
துள்ளும் சிறிய உடல்
மோதும்இன்ப மாய்வளர்ந்த
மோகச் சிறுகுழந்தை.

காளியம்மை என்மேல்
கருணை கொண்டு சின்னாட்கள்
தோளில்விளை யாடவிட்ட
சுவைஊறும் பொன்பாவை.

வானத்து ஒரு சுடர்தான்
வையத்தைப் பார்ப்பதற்கு
மீனத் திரள்வடித்த
மின் அரசி போல் வந்தாள்.

வேலைதரும் தெள்அமுதம்
வெறுப்பாக்கும் எம்காதல்
வேலைதரும் தெள்அமுதாய்
விளைந்ததொரு தேன்கும்பம்.

பம்பு மலைக்காட்டில்
பாயாமல் என்மனைவி
கும்ப முலைக்காட்டில்
குதித்திட்ட மான்குட்டி.

தெள்ளத் தெளிக்கும்
திரைமுத்தம் அல்லஎங்கள்
உள்ளக் கடலூறும்
உவகைத்தேன் முத்தாரம்.

மண்ணிட்டு மூடியதால்
மக்கிட்டுப் போகாமல்
எண்ணிட்ட நெஞ்சத்து
எழிலிட்ட வைரமணி.

வானத்து மேகத்
திரையூடு வாராதுஎம்
மோனத்துக் காதல்
முகிலூடு வந்தமதி.

காட்டு மரப்பொந்துக்
கருங்குயில் அல்லஎங்கள்
பாட்டு நெஞ்சப்பொந்தில்
பாட்டிசைத்த பொன்குயிலி.

கள்அவிழுங் கமலத்துக்
கருவண்டுஅல் லாமல்எங்கள்
உள்ளக் கமலத்தே
ஒளித்திருந்த பொன்வண்டு.

பேரழகும் பேரறிவும்
பேரருளும் மணம்வீசி
ஆர விரிவதற்காய்
அமைந்ததொரு மல்லிமொட்டு.

தேடக் கிடைக்காத
திரட்டுப்பால், தேவர்க்கும்
கூடக் கிடைக்காத
கூத்திட்ட பூச்செண்டு.

கண்ணோடு பாவைக்
கருத்தோடும் ஆசைஎல்லாம்
பண்ணோடு வந்ததொரு
பச்சைப் பசுங்கிள்ளை.

தேசம் எலாம்சுற்றும்
சிறுபறவை சின்னேரம்
வீசும் கிளைஒன்றில்
வீற்றிருந்து போவதுபோல்,

கனவினிலே கண்ட,
கனகம்போல் கள் உண்டோன்
நினைவினிலே தோன்றும்
நிச்சயம்போல், தோட்டத்தில்

காலையிலே கண்விழித்துக்
கடும்புயலில் அகப்பட்டு
மாலையிலே வாடி
வதங்கியதோர் மலரைப்போல்

ஆசையெலாம் திரட்டி
ஆருயிரை வார்த்தாற்போல்
நேசமொடு பெற்றாள்
நினைமறந்து போவாளோ?

'ராராரா மையா' வென்
ரமணியக் கைவிரித்துத்
தாரா தாராவெனநீ
சாற்றுவதும் கேட்போமோ?

'அப்பா! அப்பா' என்றும்,
'அம்மா! அம்மா' என்றும்,
இப்பாரில் எம்மைஇனி
யாரழைக்கப் போகின்றார்?

பட்டிட்டுப் பொட்டிட்டுப்
பள்ளிக்கு உனைஅனுப்பத்
திட்டமிட்ட தெல்லாம்
திசைமாறிப் போச்சுதடீ.

காட்டா தனவெல்லாம்
காட்டி எம்மைப் பிரித்தாய்
மீட்டும்எங்கள் வீட்டினிலே
விளையாட வாராயோ?

திரு.ச. து.சுப்பிரமணிய யோகியார்

☆ இக் கவிதை யோகியார் எழுதிய கவிதை தனது சின்னஞ்சிறிய மகள் இறந்தபோது பிரிவாற்றாது பாடிய உத்தமக் கவிதை. ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொன்னவை

- 30 ஆயிரம் தொன் தங்கத்தை அரசாங்கம் விற்று விட்டது.
  -ஜயசிறி எம்.பி.குற்றச்சாட்டு-
- 50 வருட கால இன ஒற்றுமையை அரசாங்கம் வீணடித்து விட்டது
  -கிரியெல்ல எம்.பி-

# சொல்லாதவை

- அமைதி காக்கக் கெய்ட்டிக்குச் சென்ற இலங்கை வீரர்களைக் கௌரவமாக ஐ.நா.திருப்பி அனுப்பி வைத்தது.
- ஐ.நா.வழங்கிய நற்சாட்சி பத்திரமாகப் பாதுகாக்கலாம்.
  -ஒருவர்-



**தாத்தா :** "பேரா சிரியண்டா"
**பேரன் :** "ஹி....ஹி....ஹி...."
**தாத்தா :** "ஏன்டா நீ சிரிக்கிறா?"
**பேரன் :** "நீங்க தானே தாத்தா சிரிக்கச் சொன்னீங்க."
**தாத்தா :** "அடே மடையா! என்னோட கதைத்தித்து நிண்டது ஒரு பேராசியண்டா."

**சின்னான் :** "நன்றி கெட்ட சென்மங்கள்"
**பெரியான் :** "ஆரடா திட்டுறா"
**சின்னான் :** "இந்த நுளம்புகளைத் தான் திட்டுறன். நம்மட ரத்தத்தக் குடி குடி எண்டு வயிறு முட்டக் குடிச்சிப் போட்டு மலேரியா, டெங்கு, சிக்குன்குனியா எல்லாத்தையுமல்லோ தந்துற்றுப் போகுதுகள்."



கவிஞர். சிவலிங்கம்

# மாயமாக மறைந்த மனிதர்கள்



இன்று வரை யாராலும் கண்டு பிடிக்க முடியாத மர்மமான நிகழ்ச்சி இது! சரவால்டர்ராலே என்ற துணிகரத் செயல் வீரர் சில நூற்றாண்டுகளுக்கு முன், 1587ஆம் ஆண்டில் வடக்குக் கரோலினா அருகில் கடலில் ஒரு தனிமையான தீவைக் கண்டு பிடித்தார். அதற்கு ரோனோத் தீவு என்று பெயர்.

விஷயமறிந்த இங்கிலாந்து ராணி தன் நாட்டவர் கண்டு பிடித்த தீவில், தன்னுடைய நாட்டவர்களே குடியேற வேண்டும் என்று எண்ணி ஜான்ஒயிட் என்பவர் தலைமையில் நூறு ஆங்கிலேயக் குடும்பங்களை அந்தத் தீவிற்கு அனுப்பினார். தீவை அடைந்த ஒயிட் தன்னுடன் வந்தவர்களுக்கு இருப்பிடம், உண்ண, உறங்க ஓரளவு வசதிகள் செய்து தந்த பின், மேலும் பல உபயோகமான உணவுப் பொருட்களை எடுத்துவர இங்கிலாந்து திரும்பினார். செல்லுமுன், தீவில் தான் குடியேற்றிய மக்களிடம் தவிர்க்க முடியாத காரணங்களினால் அந்தத் தீவை விட்டு அவர்கள் வெளியேற நேர்ந்தால், என்ன நடந்தது என்றும், அவர்கள் எங்கு சென்றுள்ளனர் என்றும் விவரங்களை கண்பார்வையில் படும்படியான இடத்தில் எழுதி வைத்துவிட்டுப் போகுமாறு உத்தரவிட்டிருந்தார்.


ஆனால் ஒயிட்டினால் இங்கிலாந்திலிருந்து ரோனோத் தீவுக்கு உடனே திரும்ப முடியவில்லை. இங்கிலாந்திற் கும், ஸ்பெயின் நாட்டிற்கும் இடையே திடீரெனப் போர் மூண்டதால், அவர் உணவுப் பொருட்களுடன் உடனே திரும்ப முடியாமல், போர் முடிந்த பிறகு 1591ஆம் ஆண்டில் தீவை அடைந்தார். அங்கு அவருக்கு ஒரு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. தீவில் ஒருவருமே இல்லை. ஒரு பெரிய மரத்தில் அவர்கள் செதுக்கி வைத்துவிட்டுச் சென்ற 'க்ரோட்டான்' என்ற வார்த்தை மட்டுமே அவர் கண்ணில் பட்டது. அது ஒரு வேளை பக்கத்திலுள்ள தீவின் பெயராக இருக்கலாம் என்று எண்ணி, அந்தத் தீவை மும்முரமாக அவர் தேடினார்.

ஆண்டுகள் பல சென்றன! 'க்ரோட்டான்' என்று அவர்கள் எழுதிவைத்த சொல்லுக்குப் பொருள் புரியவில்லை. அவர்கள் அனைவரும் மாயமாக மறைந்த மர்மமும் விளங்கவில்லை. இன்று வரை அதே நிலைமைதான் நிலவுகிறது.

நன்றி வீரகேசரி
(சிறுவர் பகுதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகம் காட்டா முத்தம்மா



தமிழ் மக்கள் வாழும் வட கிழக்கில் யுத்தம் நடக்கிறது. இனி வடக்கில் தான் கூடுதலான யுத்தம் நடக்குமாம்....... எனக்கு உள்ள மனக்குறை என்னென்றால் யுத்தத்தால் பாதிக்கப்படுவது பெண்கள் தான். இந்திய அமைதிப்படை வந்த காலத்திலும் இனி வரப்போகும் காலத்திலும் நிலை இதுதான்... தமிழ்ப் பெண்கள் கருத்தரியா நிலையை யுத்தம் கொண்டு வந்து விட்டது. தமிழினம் இப்படியும் அழிகிறது... என்னைத் தவிர இதனை வேற யார் எடுத்துக் காட்டி இருக்கிறாங்க....

அன்று கேட்ட கதை

## சுமை



யமுனா பொன்னம்பலம்

காலைக்கட்டிக் கண்ணில் ஒற்றிக் கதைகள் புனைந்து கூறி சோலைமலரே! சுந்தர ஒளியே! தூங்காய் எந்தன் மகனென்(று) தோளில் இட்டு அணைக்கும் வேளை துவளும் அன்புச் செல்லம் சுவையேயாவான் சுமையாகான்.

பெற்ற அன்னை அவனுக்கு எத்தனையோ புத்தகங்கள் கையிலேந்திப் பள்ளி செல்லும் புத்திசாலிப்பையன் அதைப் புகழ்வதில்லை சுமைகளென அத்தனையும் அறிவுக்கடல் ஆசைதீரப் படித்திடுவேன். எத்திசையும் செல்லவைக்கும் இவை சுவையே எனச் சொல்வான்.

செவ்விதழில் கனிகளேந்தி துவண்டுவரும் தலைவியவள் சொக்கவைக்கும் நிலைகண்டு மார்பினிலே இடங் கொடுப்பான். அவ்வினிய மலர்ச்செண்டு சுமையல்ல சுவையாக அறிவிழந்த தலைவனுக்கு ஆகுமாம் உண்மையிது.

எல்லாமே சுவையானால் ஏது பெண்ணே சுமையென்பீர் சொல்லாமலா விட்டிடுவேன் இக்கவிதையே அது தானே வெல்லமாம் உயிர்போக வெறும் உடலை நால்வர் தாங்கிச் செல்கின்றபோது நீ சுமையாவாய் சுவைக்கங்கிடமேது.

## தமிழ்வாணன் கருத்துரைகள்


கீழ்ப்பதவியில் இருப்பவன் மேல் பதவிக்கு ஆசைப்படுவதில் தவறு ஒன்றும் இல்லை. ஆனால், தான் இருக்கும் பதவியைக் கீழான பதவியென்று அவன் நினைப்பானேயாகில் அது தவறு. உண்மையிலே உலகில் எந்த ஒரு பதவியும் கீழானதும் அல்ல, மேலான பதவியும் அல்ல. ஒவ்வொரு பதவியும் அதற்குரிய தனிப்பட்ட முக்கியத்துவத்தை உடையதாகவே விளங்குகின்றது. அந்த முக்கியத்துவத்தை உணர்ந்தவன், எதையுமே ஒரு கீழான பதவியாகக் கருதமாட்டான்.

கீழ்ப்பதவியில் இருப்பவன் அந்தக் கீழ் பதவிகட்குரிய கடமைகளையே செவ்வையாகச் செய்யாமல் மேல் பதவிக்கு ஆசைப்பட்டால் அது அவனுக்கு ஒரு நாளும் கிடைக்காது. அப்படியே ஒரு வேளை கிடைத்து விட்டால், அதிலே அவன் எதிர் பார்த்த நன்மைகள் கிடைக்கமாட்டா. அதற்கு மாறாக அவன் சிறிதும் எதிர்பாராத அல்லல்கள் வந்து அவனுக்குத் தொல்லைகள் கொடுத்துக் கொண்டிருக்கும்.

- தமிழ்வாணன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



✳இந்தியா : பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் என்ற நிலைப்பாட்டில் இருந்து விலகிய நாடு.

✳பாராளுமன்றம் : 'ப' வரிசையில் மூன்றாவது எழுத்துக் கொண்டவரின் நினைவில் உழலும் சபை.

✳தமிழ் நாடு : இந்திய உணர்வலைகளில் புறம் தள்ளப் பட்ட மாநிலம்.

✳கருணாநிதி : சேது சமுத்திரத்திட்டத்தின் உள்ளும், முல்லைப் பெரியாறு அணைக்குள்ளும் மூழ்கடிக்கப்பட்ட தமிழ்த் தேசீயம்.

✳மனித உரிமை : இந்தியப் பார்வையில் கூட இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இல்லை என விலக்கப்பட்ட வார்த்தை.

✳குடியொப்பம் : ஜே.ஆரால் தொடங்கப்பட்டது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்சாவால் தொடர் கதையாக ஆக்கப்படுமா என சந்தேகிக்கப்படும் ரோம சனநாயகம்.

✳கோழிமுட்டை : இப்போதும் கலப்படமில்லாமல் விற்பனையாகும் உன்னத பொருள்.

✳தமிழ் : அரச கரும மொழிகளில் ஒன்று தந்திகள் தமிழில் ஏற்கப்பட மாட்டாது.

✳கொழும்பில் தமிழர் : கால்நடைகளாகக் கருதப்படும் சிறுபான்மை மக்கள்.

✳காணி : தமிழர்கள், முஸ்லீம்கள் இதன் உரிமைக்குள் இருந்தால் உறுதியை உறுதி செய்ய முடியாத வெற்றுக் கடுதாசி.

✳சம்பூர் : ஓர வஞ்சனைக்கு மறுபெயர்.


✳மதம் : மஞ்சளுக்குள் அடங்கா விட்டால் சம்பல்.

✳விலைவாசி : வாசி விலை இனி வராது எனச் சந்தேகிக்கப்படும் எதிர்மறை வார்த்தை!

✳கையடக்கத் தொலைபெசி : விலை வாசி 'Kit' செய்யாதவர்கள் 'Kit Card' போட்டுப் பேசுமிடம்

✳பாம்பு : மனித உரிமை மீறல் நஞ்சால் இரண்டாமிடத்துக்குத் தள்ளப்பட்ட விசப் பிராணி.

✳தண்ணீர் : மேட்டுக் குடியினர்க்கு இலகுவாகவும், ஏழைகட்குத் தாமதமாகவும் கிடைக்கும் திரவம்.



"என்ன கண்களைச் சுத்தி பூ பூத்திருக்கே?"

"வீட்டுக்கு T.V வந்த பிறகு பூக்கத்தான் செய்யுது!"

லக்ஷனா கொம்பியூட்டர் றப்பர் சீல்
LADSHANA COMPUTER RUBBER STAMP
வெயிலி ரோட், அரசடி, மட்டக்களப்பு.
Mob - 077-6915574
உடன் தேவைப்படின் ஒரு மணித்தியாலத்தில் செய்து தரப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் தான் நடக்கிறது

கசிப்பு காய்ச்சிக் கொண்டிருந்த போது அதன் பரல் வெடித்துச் சிதறியதால் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். இது கரந்தெனை பொலிஸ் பிரிவில் உள்ள தெஹிரிய என்ற இடத்தில் நடந்தது.


- செய்தி -

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த நால்வருக்கு தலா 4 பசு மாடுகள் வழங்கப்பட்டன. சப்ரகமுவ காணி விவசாய அமைச்சர் ரஞ்சித் சொய்சா இந்த மாடுகளை வழங்கினார். சுயதொழில் செய்யவே இந்த மாடுகள் வழங்கப்பட்டன.

- செய்தி -

(கசிப்பு உற்பத்தி செய்தால் பசுமாடுகள் கிடைக்கும் என்பது போல் இந்த ஊக்குவிப்பு அமைந்துள்ளதாக ஒரு ரசிகர் கூறுகின்றார்)

பெருந்தோட்ட நிறுவனங்கள் சில தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு உரிய காலத்தில் சம்பளம் வழங்கவில்லை.
(ஏழை அழுத கண்ணீர் என்ற வள்ளுவனின் வாய் மொழிக்கு இது சமம் என்கின்றார் ஒருவர்)




**ஆசிரியை** : பவுண் உற்பத்தியில் பெரிய நிலப்பரப்பு யாது?

**மாணவி** : எங்கள் அம்மாவினுடைய பெட்டகம் ரீச்சர்.

# விஸ்கி அறுகள்



**பா**கிஸ்தானிலும் பயங்கரவாதம் இருக்கு தாம்.... ஒரு நாளைக்கு இராணுவ ஆட்சியை எதிர்த்து எத்தனை பேர் சாகிறாங்க... என்னை பரிதாபம்... ஆனா அதிபர் முசாரப்பு பாகிஸ்தான் குடி மக்களுக்கு 'மல்ரி பரல்' அடிக்கிறதில்லை தன் நாட்டுக்கு 'மல்ரி பரல்' அடியாதவங்க பிற நாட்டுக்கு மாத்திரம் ஏற்றுமதி செய்யிறாங்க.... தட்டிக் கேட்க வேண்டியவங்க தாங்களும் தாறன் என்கிறாங்க.... ஒரு இழவும் விளங்கல்லே....




**ஆசிரியர்:** "கணனியில் பல்வேறு விடயங்களைப் பதிவு செய்து வைக்கலாம். ஆனால் , மனித மூளை யில் தான் அதிகளவான விடயங்களைப் பதிவு செய்யலாம்"

**மாணவன்:** "சேர்.... சேர்..... முக்கியமான கேள்வி ஒன்று. மனித மூளையில் பதிவு செய்து வைக்கலாம் என்றால் ஏன் தான் கம்பியூட்டரில் பதிவு செய்து வைக்கிறார் கள்."


**ஆசிரியர்:** "???"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நளமகாராஜன் சமையல் கலையில் கை தேர்ந்தவன்!
## அவன் சாதித்த சமையல் கலை பற்றி நளவெண்பா பேசும்!

மட்டக்களப்பிலே ஊரறிய உலகறிய
சமையல் செய்து உபசரிப்பிலே
வல்லவர்கள் நளபாகம் உணவகம்



அது
எங்கிருக்கிறது

அது லொயிட்ஸ் அவனியு,
இல. 28ல் அமைந்திருக்கின்றது.



காலை மலர்ந்தால் காலை உணவு.
மத்தியானம் வந்தால் சோற்றுடன் சேர்த்து அறுசுவை
உணவு. அது மட்டுமா? ஓடருக்கும் / ஓடர் இல்லாமலும்
உங்களுக்கு அறு சுவை உணவு அளித்து நாம்
கௌரவிக்கின்றோம்.



**குறைந்த விலை! நிறைந்த சுவை.**

**ஆட்டிறைச்சிக் கொத்துரொட்டி**
**இறால் கொத்துரொட்டி** **இடியப்பக் கொத்துரொட்டி**
**கணவாய்க் கொத்துரொட்டி** **முட்டைக் கொத்துரொட்டி**

எது இல்லை மறு இடம்? அது உண்டு எம்மிடம். வாருங்கள், எம்மிடம்
வரவேற்கக் காத்திருக்கின்றோம்.

நீங்கள் மட்டக்களப்புக்கு
வரும்போது வாருங்கள்.



அறுசுவை உணவளிக்க நாங்கள்
காத்திருப்போம்! கண் பூத்திருப்போம். வழிமேல்
விழி வைத்து அன்பாக உபசரிப்போம்.

**நாங்கள்**

## நளபாகம் உணவகம்
இல 28, லொயிட் அவனியு
மட்டக்களப்பு
தொ.பே : 065-4920753

## Nalapagam Restaurant
No. 28 Loydis avenue
Batticaloa
T.P. 065.4920753



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் : மிஸிஸ் அலெக்ஸ்! உங்கள் கணவர் சுகயீனம் இப்போது எப்படி?

மிஸிஸ் அலெக்ஸ் : முன்பை விடப் பறவாயில்லை.

டாக்டர் : இப்போது எங்கிருக்கிறார்?

மிஸிஸ் அலெக்ஸ் : காலையில் இறந்து விட்டார் டாக்டர்.

இவர்கள் பல பேர் பாலிலை தண்ணீர் கலந்து யாவாரம் செய்து பிடிபட்டிட் டாங்க... என்னைப் போலை கோயிலுக் குக் கொடுக்கிற பாலிலை மாத்திரம் பால் கலக்கிற குணம் உள்ள வங்க பிடிபட மாட்டாங்க.



பக்தகேடி

# மசெடோனிய பாடகர் மரணம் தேசிய துக்க தினம் பிரகடனம்



மசேடோனியாவின் பிரபல 'பொப்' இசைப் பாடகர் ரோஸ் புரோயஸ்கி, கார் விபத்து ஒன்றில் அகால மரணமடைந்துள்ளார்.

2004ஆம் ஆண்டு 'யூரோவிஸன்' பாட்டுப் போட்டியில் மசெடோனியாவிற்காகப் பாடல்கள் பாடிப் பல விருதுகளை ரோஸ் புரோயஸ்கி சுவீகரிதிருந்தார்.

26 வயதான இந்த இளம் பாடகர் பயணம் செய்த கார், கிழக்கு குரோஷிய நகரான நோவா கிராடிஸ்காவில் லொறியொன்றில் மோதியதையடுத்தே இந்த அனர்த்தம் இடம் பெற்றுள்ளது. இவ்விபத்தில் புரோயஸ்கியுடன் காரில் சென்ற வேறு இருவர் காயமடைந்துள்ளனர். பாடகரின் மரணத்தையடுத்து சமீபத்தில் அந்நாட்டில் தேசிய துக்க தினம் பிரகடனப்படுத்தப்பட்டது.

அத்துடன் உள்ளூர் வானொலிகள் புரோயஸ்கியின் பாடல்களை மாறி மாறி ஒலிபரப்புச் செய்தன. இப்பாடகரின் அகால மரணம் குறித்து மசெடோனிய ஜனாதிபதி பிரான்கோகிர்வென்கோவ்ஸ்கி தனது அனுதாபத்தைத் தெரிவித்துள்ளார். மசெடோனியாவின் திருச்சபைத்தலைவர் பேராயர் ஸ்டீபன் விபரிக்கையில், மசேடோனியா தேவதூதன் ஒருவனை இழந்து விட்டது என குறிப்பிட்டார். புரோயஸ்கி இசைத் துறையில் தனது 15ஆவது வயதில் பிரவேசித்தார்.

அவர் தனது 18 ஆவது வயதில் முதலாவது இசைத் தொகுதியை வெளியிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுராஜன் போதனைகள்




177 இடங்களில், அதுவும் தமிழகத்தில் இலங்கைத் தமிழன் அகதியாக இருக்கிறான். சமத்துவ உரிமை கேட்டு, ஆயுதம் எந்திப் போராடியும் வடக்கு, கிழக்கு பிரிஞ்சு போய்க்கிடக்கு! எல்லாம் இந்தியா கொடுத்த ஆதரவு தான்.... இது இப்பிடியிருக்க சமத்துவ உரிமை கேட்டு மலேசியா விலை தமிழன் போர் தொடுத்து இருக்கிறான் என்ன மாதிரி முடியப் போகுதோ தெரியல்ல... ஆனால் ஒன்று இந்தியாவை நம்பி மாத்திரம் தமிழா நீ போர் தொடுத்தால் தொப்பி தான் போட வேண்டி வரும்.....

# ஜார் காலத்து நகைச்சுவை

ரஷ்யாவில் ஜார் மன்னர்கள் ஆட்சி செய்த காலம் சர்வாதிகார காலமாகும். அரசுக்கு எதிராகக் கதைத்தவர்கள் யாவரும் கைது செய்யப்பட்டார்கள். ஒரு சிறைச்சாலையில் மூவர் கைதிகளாக இருந்தனர். சிறைக்காவலர் ஒருவரைப் பார்த்துக் கேட்டார்; நீ ஏன் சிறைக்கு வந்தாய்? அவன் சொன்னான் 'நான் X என்பவனை எதிர்த்துக் கதைத்ததால் சிறைக்கு அனுப்பினார்கள்". சிறைக்காவலன் மற்றவரைப் பார்த்து 'ஏன் உன்னைச் சிறைக்கு அனுப்பினார்கள்?' எனக் கேட்டான். அதற்கு அந்தக் கைதி நான் X என்பவரை ஆதரித்ததால் சிறைக்கு அனுப்பி விட்டார்கள்' எனக் கூறினான்.

சிறைக்காவலர் மூன்றாவது கைதியைப் பார்த்து 'உன்னை ஏன் சிறைக்கு அனுப்பினார்கள்' எனக் கேட்டான். அதற்குப் பதிலளித்த கைதி சொன்னான் 'முன்பு 2 கைதிகள் இருவரும் குறிப்பிட்ட X நான் தான்!



**சாத்திரி** : பத்து வருடங்களுக்கு உமக்கு சுகயீனம், பண வரவில் வீழ்ச்சி சந்தோசம் இன்மை என்பன ஏற்படும்

**வாடிக்கையாளர்** : அதன் பின்பு என்ன பலன்?

**சாத்திரி** : அதன் பிறகு மேலே சொல்லப்பட்ட விசயங்கள் யாவும் உமக்குப் பழக்கப்பட்டு விடும்.



---



**ஆசிரியை**: பால் புளியாமல் இருப்பதற்கு என்ன மார்க்கத்தைக் கையாளலாம்?

**மாணவி** : பசுவின் பால் மடியில் இருக்கக் கூடியதாகச் செய்யலாம்.

---

**ரிக்கட் பரிசோதகர்** : உம்முடைய பிரயாண டிக்கட் எங்கே

**பிரயாணி** : நான் அதைத் தொலைத்து விட்டேன்; மன்னிக்க மார்க்கமில்லை.

**ரிக்கட் பரிசோதகர்** : அப்படியண்டா.... மன்னிக்கக் கூடிய மார்க்கத்தைச் சொல்லுகிறது தானே.

---

**டாக்டர்** : உங்கள் கணவர் ஏன் இறந்து போனார்....


**ஒருத்தி** : நீங்கள் காட்டின பில்லை வாங்கிப் பார்த்த பிறகு.



**டாக்டர்** : பெண்ணே உனக்கு வந்திருக்கும் நோய் பரம்பரை வியாதி என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது .

**ஒரு பெண்** : அப்பிடியண்டா.... நீங்கள் தரும் பில்லை பின்னால் உள்ள தாத்தாவிடம் கையளியுங்க...

---



**ஆசிரியர்** : இன்னும் நாலே நாள் இருக்கிறது.... உங்களின் கேள்விகள் அச்சகத்தில் அச்சாகி விரைவில் வந்து விடும்.... ஏதும் கேள்விகள் கேட்க விரும்புகின்றீர்களா?

**மாணவன்** : சேர்.... சோதனைப் பேப்பர் அச்சாகும் அச்சகத்தின் பெயர், விலாசம் தர முடியுமா?

---



## ஒரு திருமண விளம்பரம்



50 வயதுடைய விவசாயி, 45 வயதுடைய ஒரு பெண்ணைத் திருமணம் செய்ய விரும்புகிறார்.

பெண் உழவுயந்திரம் ஒன்றின் சொந்தக்காரியாக இருக்க வேண்டும். அவ்வாறு இருப்பவர்கள் உழவுயந்திரத்தின் படத்தைச் சமர்ப்பிக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடி பெறும்



✦ வாகரைக் காட்டுக்குத் தேன் எடுக்கப் போனவர் தேனோடு திரும்பி வந்தால் கோடி பெறும்.

✦ குண்டு போடச் சென்ற விமானம் இந்தியப் பாணியில் பல இறாத்தல் பாண்களை வீசி எறிந்து சென்றால்!

✦ வன்னிக்குக் குண்டு போடச் சென்ற விமானம், குண்டுகளை ஏற்றி வராமல் ஞாபக மறதியாக வந்து திரும்பிப் போயிருந்தால்!

✦ கிளி நொச்சிக்குப் போன குண்டு வீச்சு விமானம் கரடிப் போக்குச் சந்தியில் உள்ள கந்தசாமி கோயிலைக் கண்டு மலர்தூவி வழிபட்டுச் சென்றிருந்தால்!

✦ சேது சமுத்திரத்திட்டத்துக்கு மண் அகழ்வோரை இராமர் சந்தித்து ‘இன்று போய் நாளை வா’ எனத் திருவாய் மலர்ந்தால்!

✦ குரங்கு அப்பம் சுட்ட கதையாக இலங்கை இனப்பிரச்சனை மாறாமல் போனால்!

✦ 2008ம் ஆண்டில் ‘இ’ என்று தொடங்கும் நாட்டுக்கும் ‘ஐ’ என்று தொடங்கும் நாட்டிற்கும் காலம் சரியில்லை எனச் சோதிடர்கள் கூறியுள்ளனர். அவ்வாறு அவர்கள் தொடர்ந்து கூறாது இருந்தால்!

✦ சிவாஜி கணேசன் மீண்டும் பிறந்து தன் பழம் பிறப்பைக் கூறி மீண்டும் நடிப்பேன் எனக் கூறினால்!

✦ தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளம் 500/- ரூபாவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது என்றும் அரிசி, மா, சீனி என்பன அவர்கட்கு மானிய விலையில் கிடைக்கும் என அறிவிக்கப்பட்டால்!

✦ வடக்கிலும் கிழக்கிலும் பாவிக்கப்படும் கையடக்கத் தொலைபேசிகள் வருங்காலத்தில் ஒரு போதும் செயலிழக்காது என அரசு அறிவித்தால்!

✦ இனப்பிரச்சனைக்காக நல்ல தீர்வு ஒன்றினை ஹெல – உறுமய முன் வைத்துப் போராடும் போது ஜே.வி.பி ஆதரவு அளித்தால்!


✦ யாழ்ப்பாண மக்களின் கஸ்டத்துக்காக இறக்குமதி வெங்காயம் கொடுக்கப் போகிறோம் எனஅறிவிப்பு வரா விட்டால்!

✦ மட்டக்களப்பு மக்களே... படுவான் கரையில் மாடு இறந்தது எனக் கவலைப்பட வேண்டாம். கொழும்பில் இருந்து தயிரும், மோரும் அனுப்பி விடுகிறோம் என அரசு சொல்லா விட்டால்!

✦ சமைத்த உணவு தருகிறோம்.... தமிழ் மக்களே நீங்கள் அகதிகள் ஆகுக.... என யாராவது சொல்லாவிட்டால்!

## கிளிப்பேச்சு

### மிருகங்கள் பேசினால்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முந்திக் கொள்ளுங்கள்!

பந்திக்கு முந்து! படைக்குப் பிந்து இது பழமொழி நம்ப முடியாத விலைக்கழிவுடன், அரிய பெரிய நூல்களைத் தர முன்வந்திருக்கும் இஸ்லாமி புக் ஹவுஸில் முந்தி நுழையுங்கள்!

- மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
- உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்
- தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம்.
- அண்ணாமலை பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்ட தமிழ்ப் புத்தகங்கள். (பழைய பதிப்பு)



சிறப்புத் தள்ளுபடி 40%

## எங்கே போகிறாய் இங்கே கவனி



| நூலின் பெயர் | பக்கம் | விலை |
|---|---|---|
| 1.தமிழ் நாடகம், தோற்றமும் வளர்ச்சியும் | 798 | 292/= |
| 2.தொல்காப்பியம் (செய்யுளியல்) | 1066 | 260/= |
| 3.ஸ்ரீ நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் | 1566 | 260/= |
| 4.திருக்குறள் உரைவேற்றுமை | 1000 | 325/= |
| 5.இலக்கணஆய்வடங்கில் எழுத்தும் சொல்லும் | 710 | 325/= |
| 6.தமிழ்க் கல்வெட்டுகளில் புறப்பொருள் இலக்கணம் | 428 | 130/= |
| 7.தொல்காப்பியம் உரைவளம் (சொல்லதிகாரம் எச்சவியல்) | 445 | 147/= |
| 8.வரலாற்று நிலவியல் ஆய்வுரை (அறிமுகமும் ஆய்வுகளும்) | 662 | 195/= |

விலைக்கழிவு:
குறிப்பிட்ட
விலையில் இருந்து
40% கழிவு



இவைகளுடன் பல்வேறு தலைப்புக்களில் நூற்றுக்கும் அதிகமான புத்தகங்களை எம்மிடம் இருக்கின்றன. அனைத்துப் புத்தகங்களுக்கும் 40% கழிவு வழங்கப்படும். மட்டுப்படுத்தப்பட்ட பிரதிகளே எம்மிடம் இருப்பதால் உங்களது பிரதிகட்கு இன்றே, முந்திக் கொள்ளுங்கள். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவதே வாழ்க்கையில் முன்னேற ஒரே வழியென்று ஒரு அறிஞர் கூறுகின்றார்.

## தொடர்புகட்கு

## இஸ்லாமி புக் ஹவுஸ்

இல.77, தெமட்டகொடை றோட்
கொழும்பு - 09

தொலைபேசி : 0112684851
தொலைநகல் : 0112669197



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தியவான் சாவித்திரி

(சென்ற மாத இதழ் தொடர்ச்சி...)

*சத்தியவான் சாவித்திரி தமிழ்ப் பாரம்பரியக் கதையாகும். இன்றைய இளம் சந்ததிக்கு இக்கதைகள் பற்றி எதுவும் புரியவில்லை. சிறுவர்கட்குப் புரியும்படியாக இக்கதையின் நான்காம் அங்கத்தைச் சுவைத்திரள் வெளியிடுகின்றது.* ■ ஆசிரியர்

சாவித்திரி தயங்கினாள். பிறகு சொன்னாள் "காலவபுரி இளவரசன் சத்தியவானை நேசிக்கிறேன். அவருடைய அழகையும் வீரத்தையும் கேட்டு அவரை நேரில் பார்க்காமலே கணவராக வரித்தேன். சமீபத்தில் அவரை நேரில் காணும் பாக்கியமும் கிடைத்தது. என்னை அவர் சிங்கத்தின் வாயிலிருந்தும் காப்பாற்றினர். என் உயிரைக் காப்பாற்றிய அவரையே மணக்க விரும்புகிறேன்."



சாவித்திரியின் கூற்றைக்கேட்ட நாரதர் வருத்தமடைந்தார். "சாவித்திரி! போயும் போயும் இந்த சத்தியவானை மணக்க விரும்புகிறாயே. அவனுக்கு இப்போது ராஜ்யமில்லை. அவனது ராஜ்யத்தை கஜகேது பறித்துக் கொண்டு விட்டான். சத்தியவானின் பெற்றோர் கண்களையும் குருடாக்கிவிட்டான். இப்போது சத்தியவான் அவனுடைய கண் தெரியாத பெற்றோருடன் காட்டில் வசிக்கிறான். தினமும் மரம்வெட்டிவாழ்க்கை நடத்துகிறான் நீ நினைப்பது போல் உன்னை அவனால் அரச போகத்தில் வைத்திருக்கவும் முடியாது. இவை எல்லாவற்றையும் விட அவனைப்பற்றி வேறு ஒன்றும் இருக்கிறது."

'அது என்ன சுவாமி?' என்று பதற்றத்துடன் கேட்டாள் சாவித்திரி.

"எப்படிச் சொல்வது சாவித்திரி?.... இன்றிலிருந்து சரியாக ஓர் ஆண்டில் சத்தியவான் மரணமடைவான்"

"ஐயோ! உண்மையாகவா?" என்று அலறினாள் சாவித்திரி.

"அதனால்தான் சொல்கிறேன் சாவித்திரி! வேறு ஒரு வாலிபரைத் தேர்ந்தெடுத்துக் கொள்" என்றார் நாரதமுனிவர்.

சாவித்திரி நாரதரை நோக்கிப் புன்முறுவல் செய்தாள். "சுவாமி! என்னால் சத்தியவானை மறக்கவோ, வேறு ஒருவரை மணக்கவோ முடியாது. இந்தப் பிறவியில் சத்தியவான் என் கணவர், இனி நீங்கள் தான் உங்கள் வாக்கைக் காப்பாற்ற வேண்டும்"

நாரதர் ஆச்சரியத்துடன் கேட்டார். "நானா என் வாக்கையா? திருமணம் செய்து வைக்கத்தானே!"

"திருமணம் செய்து வைத்தால் போதுமா? தாங்கள் தீர்க்க சுமங்கலி பல என்று வாழ்த்தினீர்களே! அந்த வாக்குப் பலிக்கச் செய்ய வேண்டாமா?" என்று கேட்டாள் சாவித்திரி.

நாரதர் அசந்து போனார். "சாவித்திரி! சரியாக என்னைச் சிக்க வைத்துவிட்டாய். மகா புத்திசாலியான நீ, நீண்ட காலம் கணவனுடன் வாழ்வாயாக! என் வாக்கும் பலிதமாகாமல் போகாது" என்று கூறியவர் சாவித்திரியின் காதோடு சாவித்திரி தேவியின் மூல மந்திரத்தை உபதேசித்தார் "இதைத் தினமும் உச்சரித்து வா. உன் துன்பங்கள் அகலும். உன்னுடைய மாங்கல்யம் வலிமையடையும்" என்றார்.

இருவரும் அரசனும் அரசியும் இருக்குமிடம் வந்தனர். மிக ஆவலுடன் அரசியும் அரசனும் நாரதரிடம் கேட்டார்கள் "சுவாமி! சாவித்திரி என்ன சொல்கிறாள்"

"மன்னா கவலை வேண்டாம். அவள் சரியான கணவரைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறாள். இப்போது சத்தியவான் இருக்கும் நிலையைக் குறித்துக் கவலைப் படாதே. வெகு விரைவிலேயே அவன் நாட்டையும் பெற்றுவிடுவான். அவன் பெற்றோருக்கும் பார்வை வந்து விடும். என் ஆசி பூரணமாக உண்டு" என்று மூவரையும் வழ்த்தி விடை பெற்றுச் சென்றார் நாரத முனிவர்.

முனிவரின் வாக்குப்படியே சத்தியவானுக்கும் சாவித்திரிக்கும் திருமணம் நடைபெற்றது. சத்தியவானுடன் வசிக்கச் சாவித்திரி பெற்றோரிடம் விடை பெற்றுச் சென்றாள்.

காட்டில் வசித்த கண் பார்வையற்ற மாமனார், மாமியாருக்குத் தொண்டு செய்வதிலும் கணவன் மனம் கோணாமல் நடந்து கொள்வதிலும் மனத்தைச் செலுத்தினாள் சாவித்திரி, கணவனுடனேயே எப்போதும் இருக்கும் பழக்கத்தையும் மேற்கொண்டாள்.

தினமும் காலையில் எழுந்ததும் சாவித்திரியும் சத்தியவானும் பார்வையற்ற பெற்றோருடைய தேவைகளைப் பூர்த்தி செய்வார்கள். அவர்கள் பல துலக்குவதிலிருந்து நீராடி சாப்பிட்டு ஓய்வுடன் அமரும்வரை பணிவிடை புரிவார்கள். மாடல்யனிடம் பெற்றோரைக் கவனிக்கும் வேலையை ஒப்படைத்து விட்டுக் கணவனும் மனைவியுமாகக் காட்டிற்கு விறகு வெட்டிச் சேகரிக்கப் புறப்படுவார்கள்.

வழி நெடுக இருவரும் கவலைகளை மறந்து உல்லாசமாகப் பேசிக் கொண்டே போவார்கள். வனத்தின் எழிலையும் பறவைகளின் குரலின் இனிய ஒலியையும் கேட்டு மகிழ்ந்து கொண்டு, கனி மரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்பட்டால் கனிகளையும் பறித்துச் சேகரித்துக் கொள்வார்கள்.

கடுமையான வெயிலோ, பலத்த காற்றோ எதைப் பற்றியும் கவலையே இல்லை. அவர்கள் மனமெல்லாம் அன்றைய கடமையிலேயே இலயித்திருந்தது. பார்வையற்ற பெற்றோருக்கு ஒரு குறையுமில்லாமல் அவர்களைப் பாதுகாப்பதில் அக்கறை காட்டினார்கள்.

பெற்றோர் அரண்மனையில் வசிக்கும்போது சாவித்திரி ஒரு சிறுவேலையையும் செய்தது கிடையாது. அவளுடைய ஆடைகளைத் துவைத்ததும் இல்லை. கூந்தலைக்கூடத் தோழிகள் தான் வாரி முடிந்து விடுவார்கள். அவளை ஒரு சிறு வேலையையும் செய்யத் தோழிகள் அனுமதிக்க மாட்டார்கள். நகரத்திலேயே நடந்தறியாத சாவித்திரி இன்று காட்டில் முள்ளிலும் கல்லிலும் நடக்கவேண்டியதாயிற்று அதற்காக அவள் வருத்தப்பட்டதே இல்லை. சிறு வயது முதல் நேசித்த கணவனையே அடைந்தது அவளுக்குப் பெருமையாக இருந்தது. இந்த ஒரு முக்கிய மகிழ்ச்சிக்காக அவள் எத்தகைய துன்பத்தையும் அனுபவிக்க சித்தமாக இருந்தாள்.

அவள் மனத்தைக் கலக்கிக் கொண்டிருந்தது கணவனுக்கு ஏற்படவிருக்கும் துன்பம் ஒன்றுதான், அவள் வேலை செய்யும்போதும் சிறிது தனித்து இருக்கும் சமயத்திலும் இரவோ பகலோ எந்நேரத்திலும் நாரத மாமுனிவர் உபதேசித்த சாவித்திரி தேவியின் மூலமந்திரத்தை உச்சரித்துக் கொண்டிருந்தாள். அவள் வாழ்க்கை ஒளிமயமாக விளங்க கணவன் நீண்ட ஆயுளுடன் இருக்க வேண்டும். அதற்காக அவள் எத்தகைய காரியத்தையும் செய்யத் தயாராக இருந்தாள்.

சத்தியவானுக்கு தன் ராஜ்யம் போயிற்றே. பெற்றோர் பார்வை இழந்தனரே என்ற கவலை இருந்தாலும் மனதுக்குப் பிடித்த, மனைவி கிடைத்ததால் மகிழ்சியடைந்தான். தன் சொல்லுக்கு மாறு சொல்லாமல், தன்னுடைய பார்வையற்ற பெற்றோருக்கு முகம் கோணாமல் பணிவிடை செய்வதும் அவன் மனத்தை மேலும் கவர்ந்தது. அவனைக் காடோ, நதியோ எங்கு சென்றாலும் உடன் வருவதும் அவனுக்கு அவளிடம் அதிக நெருக்கத்தையும் அன்பையும் அதிகரிக்கச் செய்தது.

சில சமயங்களில் சாவித்திரி அவனை விட்டுப் பிரியாமல் பின்தொடர்வது ஏன்? அவன் மீது சந்தேகமா? இல்லை கணவன்மீது அளவு மீறிய அன்பால் ஏற்பட்டதா? மறுகணமே அவனே சே! அவள் சந்தேகப்படவே மாட்டாள் அளவற்ற அன்பு காரணமாகவே ஒரு வினாடியும் பிரிய விரும்பவில்லை என்று மனத்தைத் தேற்றிக் கொள்வான்.

காலையில் விறகு வெட்டி வரப் புறப்படும் சத்தியவான் சாவித்திரியும் மிக விரைவாகவே குடிசைக்குத் திரும்ப நினைப்பார்கள். பெற்றோரைக் கவனித்துக் கொள்ள மாடல்யன் இருந்தாலும் அவர்கள் இருவருக்கும் சத்தியவானும் சாவித்திரியுமே பணிவிடை செய்யவும் உபசரிக்கவும் விரும்பினர். ஓரளவு கனி வகைகளைச் சேகரித்துக் கொள்வார்கள். ஒன்று அல்லது இரண்டு சுமை விறகை வெட்டிக் கட்டித் தூக்கிக் கொண்டு திரும்பி விடுவார்கள். அவர்கள் திரும்பி வருவதையே மாடல்யனும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பான். அவர்கள் வந்ததும் விறகுச் சுமையை எடுத்துக் கொண்டு நகரத்திற்குச் செல்வான். விரைவாக அதை விற்று உணவுப் பொருள்களை வாங்கிக் கொண்டு சிறிதும் தாமதிக்காமல் குடிசைக்குத் திரும்புவான்.

அன்றாட வாழ்க்கை ஒரே விதமாகச் சென்றாலும் அவர்களில் ஒருவரும் சிறிதும் மனம் கோணவில்லை. இந்த அளவாவது வாழ்க்கை இன்பமாகக் கழிகிறதே என்று மகிழ்ச்சியடைந்தார்கள். நாள்கள் சென்று கொண்டிருந்தன. ஒவ்வொரு நாளையும் சாவித்திரி கவனமாகக் கணக்கிட்டுக் கொண்டு வந்தாள். நாரதர் கூறியதை அவள் மறக்கவில்லை. அவருடைய யோசனை காரணமாகக் கணவனுடனும் எங்கும் செல்லும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டாள். தினம் தவறாது சாவித்திரி தேவியின் மூலமந்திரத்தை உச்சரித்ததுடன் சாவித்திரிக்கு உகந்த தினங்களில் விரதமும் இருந்து வந்தாள்.

ஓர் ஆண்டு என்பது மிகவேகமாக நாழிகைகள் நாள்களாகி, நாட்கள் வாரங்களாகி வாரங்கள் மாதங்களாகி மாதங்கள் ஆண்டின் கடைசிக்கு வந்து கொண்டிருந்தது. நாரதர் சொன்ன கணக்குப்படி நாளைதான் ஓர் ஆண்டு பூர்த்தியாகிறது. அன்று வரை கணவனுக்கு ஓர் அபாயமும் ஏற்படவில்லை. நாளை மிக முக்கியமான நாள். எந்த விதத்திலும் கணவனைவிட்டு வினாடியும் பிரியக்கூடாது என்று சாவித்திரி அன்று இரவு படுக்கும்போது தீர்மானித்துக் கொண்டாள். இரவு முழுவதும் இமைக்காமல் சாவித்திரி தேவியின் மூல மந்திரத்தை உச்சரித்துக் கொண்டேயிருந்தாள்.

அன்று வழக்கத்தைவிடச் சிறிது முன்னதாகவே எழுந்தாள் சாவித்திரி. குளித்துக் காலைக் கடன்களை முடித்தாள். கணவன் எழுந்திருப்பதற்குள் மாமன் மாமிக்குத் தேவையானவற்றையும் ஆகாரத்தையும் தயார் செய்தாள். அவள் வேலையில் ஈடுபட்டிருந்தாலும் மனம் மாத்திரம் சாவித்திரியின் மூல மந்திரத்தையே உச்சரித்துக் கொண்டே இருந்தது.

சத்தியவான் அன்று சிறிது அதிக நேரம் தூங்கி விட்டான். அவன் கணவிழித்துப் பார்த்த சமயம் சாவித்திரி குளித்து வேலைகளைச் செய்து முடித்துக் கொண்டிருந்தாள். முதலில் சிறிது ஆச்சரியமாகத் தோன்றினாலும் சாவித்திரியின் குணம் தெரியுமாதலால்

ஒரு மெசின் வந்திருக்கிறது.... ஒருவர் உண்மை பேசுகிறாரா அல்லது பொய் பேசுகிறாரா என்பதை அந்த மெசின் பகுத்து அறியும்

சேர்.... அந்த மெசினால் உண்மை பொய்களின் சதவீதத்தைக் கண்டுபிடிக்க முடியுமா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கு ஒன்றும் புதுமையாக இருக்கவில்லை.

சத்தியவானும் மளமளவென்று காலைக் கடன்களைச் செய்து முடித்தான். பெற்றோருக்கான பணிவிடைகளைச் செய்து முடித்தான். அவர்களுக்கும் மாடல்யனுக்கும் ஆகாரம் கொடுத்தார்கள்.

விறகு வெட்டிவரப் புறப்படும் சமயம் சாவித்திரி கணவரிடம் பெற்றோரை இருவரும் வணங்கி ஆசியைப்பெற விரும்புவதாகச் சொன்னாள். ஒவ்வொரு நாளும் பெற்றோரை வணங்குவது வழக்கமானாலும் இன்று காட்டிற்குச் செல்லும் சமயம் மீண்டும் வணங்க ஆசி பெற சாவித்திரி விரும்பியது சத்தியவானுக்கு வியப்பாகி இருந்தது. ஆனாலும் அவன் தன் வியப்பை அடக்கிக்கொண்டு மனைவியுடன் சேர்ந்து பெற்றோரை வணங்கினான்.

துயுமத்சேனனும் பத்மாட்சியும் அவர்களை வாரி மார்புடன் அணைத்து "நீண்ட காலம் இணை பிரியாது வாழ்வீர்களாக" என்று வாழ்த்தினார்கள்.

மாடல்யனிடம் பெற்றோரைக் கவனித்துக் கொள்ளச் சொல்லி சாவித்திரியும் சத்தியவானும் விறகு வெட்டிவரச் சென்றனர்.

சத்தியவான் தோளில் கோடாலியைத் தாங்கி உற்சாகமாக நடந்தான். சாவித்திரி மனத்தில் சாவித்திரி தேவியின் மூல மந்திரத்தை உச்சரித்த வண்ணம் நிழல்போல் தொடர்ந்தாள்.

-தொடரும்-

## மை சிந்திய மனிதங்கள்



கடந்த மார்கழி/தை இதழ் கண்டேன் பெருமைப் பட்டோம். தமிழ் நாட்டில் இருந்து வெளிவரும் இதழ்கள் பொல் ஒரு தனிமனித முயற்சியாய், ஒரு பிராந்தியத் தலைநகரில் இருந்து வெளிவரும் சுவைத்திரளே.... உன் துணிவைப் பாராட்டுகின் றேன். பாலா சங்குப்பிள்ளையின் சிரிகதை.... கவிஞர் சிவலிங்கத்தின் நகைச்சுவைகள்.... அனைத்தும் அற்புதம்.

வி.விநாயகமூர்த்தி,
வாழைச்சேனை.

சுவைத்திரள் நகைச்சுவை ஏட்டினை ஜேர்மனியில் தமிழ் வாசகர்கள் நன்கு விரும்பிப் படிக்கின்றார்கள். அதிகப் பிரதிகள் அனுப்புக.

திரு.பசுபதிராஜா,
ஜேர்மனி.

அன்பான ஆசிரியருக்கு,

தாங்கள் அனுப்பிய சுவைத்திரள் கிடைத்தது. மேலும், சுவைத்திரள் பற்றி நிறைகளைத் தவிர்த்து சில குறைகளைக் கூற வேண்டும் போலுள்ளது.

★"சுவைத்திரள் உலக நகைச்சுவை ஏடு" என்பது மிகப்பெரிய நகைச்சுவையாக உள்ளது. மிகைப்படுத்தல் வரவேற்கக்கூடியதல்ல. (சிரித்திரன் ஏடு அடக்கமாகப் பணியாற்றி ஆழமாக தடம்பதித்தது தாங்கள் அறிந்ததே!)

★கருடன் பதிலில் 21 கேள்விகளுக்கு கேட்பவர் பெயரோ, ஊரோ இல்லை. ஆசிரியரே தனக்கு வசதியான பதிலளிக்கக் கேள்விகளையும் அமைத்துக் கொண டாரோ என்ற கேள்வி எம் போன்ற வாசகர்களுக்கு எழுவது சாதாரணமானது.

★சஞ்சிகை விலையினை பலவாறு அமைத்துக் கொள்வது எங்குமே இல்லாத நடைமுறை. இதை புதுமை புகுத்தல் என்று கூறுவது கூட கேலிக்குரியது. ஒரே விலையினை குறிப்பிட்டு, தபால் செலவினை தனியாக குறிப்பிடவேண்டும். அதை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள்.

★சிரிப்பும் இல்லாத சிந்தையுமில்லாத நகைச்சுவையினை 'சிரிப்பு' என்ற பதத்துக்குள் இணைப்பதை தவிர்க்க வேண்டும். உதாரணமாக 28ம் இதழில் 29ம் பக்கத்தில் வந்திருக்கும் "எனக்கு 70 வயது" என்ற நகைச்சுவை(?)

தொடர்ந்து சஞ்சிகை அனுப்புங்கள் எதிர்பார்க்கிறேன். இறுதியாக சந்திரபாபுவின் பாடல்.

"சொல்லுறதை சொல்லிப்புட்டேன்......
செய்யுறதை செஞ்சிடுங்க.......
நல்லதுண்ணா கேட்டிடுங்க......
கெட்டதுன்னா விட்டிடுங்க....."

க.பொன்னம்பலம்
உடப்பு.

**அன்புள்ள வாசகரே....**

**சில காரணங்களால் கருடன் பதில்களில் கேள்வி கேட்பவர் பெயர் வெளியிடப் படுவதில்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலா.சங்குப்பிள்ளை

# சிக்கல் சிங்காரமும் அலட்டல் அன்னக்கிளியும்



சிங்காரம் சிரிப்பைத் தொலைத்த முகத்துடன் சிடுசிடுவென காரியாலயத்தில் பணி புரியும் மற்ற இருவரிடமும் எறிந்து விழுந்தவாறு 'தொப்பென' அந்த பழைய நாற்காலியில் அமர்ந்தார். அவர் வீட்டிலிருந்து புறப்படும் போது அவரின் மனைவி அன்னக்கிளி கடுகடுவென முகத்தை வைத்துக் கொண்டு கத்தத் தொடங்கி விட்டாள்.



"யோவ்... நீ என்ன செய்வீயோ ஏது செய்வீயோ எனக்குத் தெரியாது. வயசுக்கு வந்த மகள் கல்யாணத்துக்கு காத்திருக்கா. அவளுக்கு நகை செய்யணும். நல்லதா நாலு உடுப்பு வாங்கணும் புது செருப்பு வாங்கணும். அப்புடியே எனக்கு பட்டுப் புடவை, எங்கம்மாவுக்கு புடவை எல்லாம் வாங்க வேண்டி யிருக்கு. வேலை முடிஞ்சி வரும் போது பணத் தோட வா....". "இங்கப் பாரு அன்னக்கிளி... தோட்டத்துல இன்னும் சம்பளம் போடலை. மாசக் கடைசியிலத்தான் எனக்கு சம்பளம் வரும்... இந்த நிலமையில திடீர்னு இப்புடி குண்டைத் தூக்கிப் போட்டா நான் தலையில துண்டைப் போட்டுக்கிட்டு தெருவுலத்தான் நிற்கணும்..."

"ஆமா இந்த வெட்டிப் பேச்சிக் கொண்ணும் கொறைச்சலில்லை. குரங்கு கையில பூமாலையை குடுத்தமாதிரி எங்கப்பன் மாப்பிள்ளை எம்.ஜி.ஆர் மாதிரி இருப்பார்ன்னு உன் தலையில கட்டினாரு. ஆனா நீ எம்.ஆர்.ராதா மாதிரியில்ல இருக்கே. உன்னோட வேலை செஞ்சவனெல்லாம் இப்போ கார் பங்களான்னு இருக்கான். ஆனா நீ இன்னமும் நல்ல பேர் இல்லாம நாலுகாசும் இல்லாம இருக்கே. கேட்டா நேரம் நல்லாயில்லைன்னு சொல்லுவே. தோளுக்குமேலே வளர்ந்த மகளுக்கு மாப்பிள்ளை பார்க்க வக்கில்லை. அப்புறம் எதுக்கய்யா எனக்கு புருஷனா இருக்கே..."

சிங்காரம் மேற்கொண்டு எதுவும் பேசாமல் விடு விடுவென அந்த இடத்தை விட்டு நடக்கத் தொடங்கி விட்டார். மனைவியிடம் அதிகம் பேச்சு கொடுத்தால் அப்புறம் யாரைப் பற்றியும் கவலைப் படாமல் கத்தத் தொடங்கி விடுவாள். எனவே சத்தம் போடாமல் இடத்தை காலி செய்வதுதான் நல்லது.

சிங்காரம் அந்தக் கால பத்தாவது படித்தவர். தமிழும் ஆங்கிலமும் பிழையில்லாமல் எழுதுவார். அவருக்கு அப்போதே அரசியலில் அதிக நாட்டமிருந்தமையினால் ஒரு தொழில் சங்கமொன்றில் வெறும் நூறு ரூபாய்க்கு வேலைக்குச் சேர்ந்தார். அங்கே வேலைக்கு சேர்ந்த புதிதில் மிக நல்லவராக அமைதியானவராகவே இருந்தார். செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் நீண்ட கால்சட்டையை தவிர்த்து வேட்டி சட்டையுடன் சைவப் பழமாக மாறி விடுவார். தொழில் சங்க தலைவரிடம் மிக பயபக்தியுடன் கோயிலில் கடவுள் சந்நிதியில் நிற்பதைப் போல மிக பவ்வியமாக நிற்பார். ஆனால் தலைவர் அவற்றையெல்லாம் கவனிப்பதில்லை. அடுத்ததாக எந்தக் கட்சிக்குத் தாவினால் என்ன பதவி கிடைக்கும். யார் கழுத்தில் துண்டைப் போட்டால் எத்தனைக் கோடி கிடைக்கும் என்பதிலேயே அவர் குறியாக இருப்பதனால் சிங்காரம் போன்றவர்களெல்லாம் அவர் கால் தூசிக்கு சமம். இதையெல்லாம் சிங்காரம் மிக லேட்டாகத்தான் தெரிந்துக் கொண்டார். அவர் தான் பணிபுறியும் தொழில் சங்கத்தினையும் தலைவரையும் பற்றி தெரிந்துக் கொண்டபோது அவருக்கு திருமணமாகி ஐந்து வயதில் குழந்தையும் இருந்தது.

எனவே நல்லவராக இருந்த அவர் நரிப்புத்தியுள்ளவராக மாறத் தொடங்கினார். சம்பளத்தை மட்டும் வைத்துக் கொண்டு காலம் தள்ள முடியாது. படிக்காத அப்பாவி தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றினால்தான் அவரால் காலம் தள்ள முடியும். அவர் முதல் முதலாக பிள்ளையார் சுழி போட்டு சுயமாக சம்பாதித்த ஐநூறு ரூபாயை அவரால் மறக்கவே முடியாது. அன்று ஒரு சனிக்கிழமை. திருவிழாவில் ஏற்பட்ட சண்டையினால் பத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினைந்து பேரை சிறையில் போட்டு விட்டார்கள். அவர்களை விடுவிப்பதற்காக சிங்காரத்தைத் தேடி வந்தார்கள் தோட்டத்தலைவரும் தொழிலாளர் சிலரும்.

"ஐயா நம்ம தலைவர் கிட்ட சொல்லி நீங்கதான் எப்படியாவது அவங்கைள வெளியே எடுக்கணும்...."

"அட இதுக்கெல்லாம் எதுக்கு தலைவர் கிட்டப் போகணும். நானே செஞ்சித்தாறேன். இருங்க நான் பொலீசுக்கு பேசுறேன். ஹலோ யார் இன்ஸ்பெக்டரா.. நான் சிங்காரம் பேசுறேன்... ஆமா... கோர்ட்டுக்கெல்லாம் போட வேண்டாம்... உடனே விடுதலை செய்யனும்... அதெல்லாம் நான் பார்த்துக்கறேன்... ரொம்ப நன்றி...

சிங்காரம் தொலைபேசியை வைத்து விட்டு வெற்றிச் சிரிப்புடன் அவர்களைப் பார்த்தார்.

"எல்லாம் சரி... ஆனா ஒரு சின்ன விஷயம். பொலீசுல சும்மா செய்ய மாட்டானுங்க. போத்தல் வாங்கணும்... நிறைய சிலவு இருக்கு ஐநூறு ரூபாய் செலவழித்தால் காரியம் கச்சிதமா முடிஞ்சிடும்...'

"அதுக்கென்ன... இந்தாங்க ஐநூறு. வேலையை முடிச்சிடுங்க... உங்களுக்கு வேறயா ஐம்பது தந்திடுறோம்..."

அவர்கள் திருப்தியுடன் போக சிங்காரம் முதன் முதலாக கிடைத்த அந்த ஐநூறு ரூபாய் நோட்டுக்களை கண்களில் ஒற்றியவாறு பைக்குள் போட்டுக் கொண்டார். அப்போது யாரோ இரண்டு பேர் அங்கே வந்தார்கள்.

"யார் நீங்க... என்ன விஷயம்...?

"நாங்க தெலைபேசி நிறுவனத்திலிருந்து வருகிறோம். உங்க தொலைபேசி ரெண்டு நாளா வேலை செய்யலைன்னு புகார் வந்திச்சி. அதை சரி பண்ணத்தான் வந்திருக்கோம்..."

இன்னொரு நாள் சிங்காரத்துக்கு அவசரமாக இருநூறு ரூபாய் தேவையாக இருந்தது. மீனுக்காக காத்திருக்கும் கொக்கினைப் போல வைத்தகண் இமைக்காமல் வாசலையே பார்த்துக் கொண்டிருந் தார். அப்போது ஒருவன் வந்தான்.

"ஐயா நான் தோட்டத்துல வேலை செஞ்சி ஓய்வு பெற்றுற்றேன். எனக்கு இன்னும் பிராவிடன் பண்ட் வரல்ல. என்னமோ கடுதாசி வந்திருக்கு. இந்த யூனியன்லதான் நான் மெம்பரா இருக்கேன். இதை கொஞ்சம் பார்த்துச் சொல்லுங்களேன்..."

சிங்காரம் அதை வாங்கிப் பார்த்தார். ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்த அந்த கடிதத்தில் பிராவிடன்பண்ட் பணத்துக்கான காசோலை இன்னும் இரண்டு வாரங்களுக்குள் அனுப்பிவைக்கப்படுவதாக எழுதப்பட்டிருந்தது. சிங்காரம் முகத்தை சற்று கடுமையாக்கிக் கொண்டு அவனைப் பார்த்தார்.

"என்னப்பா அநியாயமா இருக்கு. உன்னோட பெயர் வித்தியாசமா இருக்காம். உடனடியா லெட்டர் ஒண்ணு போடணுமாம்.. என்ன செய்யிறது...?"

"ஐயையோ... தொரே நீங்களே பார்த்து செஞ்சிக் குடுத்துடுங்க. பேத்திக்கு காது குத்து இருக்கு. பேரன் கதிர்காமம் வேற போகணும். இந்தக் காசு வந்தாதான் எல்லாம் செய்ய முடியும்..."

"அது சரி... இதுக்கு முன்னூறு ரூபா கிட்ட செலவாகுமே. அட செலவு போனா பரவாயில்லை. இந்தாங்க இது என் மருமவ சாமான் வாங்க குடுத்த காசு... இதை வச்சிக்கிட்டு வேலையைத் தொடங் குங்க..."

"சரி... நீ போய் பக்கத்துல இருக்கிற சைவக் கடையில் சூடா ரெண்டு வடையும் பணீசும், டீயும் வாங்கிட்டுவா அதுக்குள்ள கடிதத்தை டைப் பண்ணிடுறேன்..."

அவன் வேகமாக அந்த இடத்தை விட்டு நடக்க சுளையாக கிடைத்த அந்தப் பணத்தை சந்தோஷத்துடன் பைக்குள் வைத்துக் கொண்ட சிங்காரம்... பொய்யாக ஒரு கடிதத்தை தயாரித்தவாறு சூடான வடை தேநீருக்காக காத்திருக்கத் தொடங்கினார்.

இவ்வாறாக தொழில்சங்கவாதியாக தொழில் செய்த சிங்காரம் பொய் பித்தலாட்டம் மூலமாக ஓரளவு வசதியாக வாழ்ந்தாலும் இது போதாது இன்னும் வேண்டும் இன்னும் வேண்டும் என அவர் மனைவி அன்னக்கிளி நச்சரித்தாள். முதலில் அவளின் தொல்லை பொறுக்க முடியாமல் கிம்பளத்துக்காக கிளித்தட்டு ஆடியவர் நாள் செல்ல செல்ல சம்பளத்தை விட அது அதிகமாக கிடைக் கவே அதையே நிரந்தரமாக்கி விட்டார். இந்நிலையில் தான் காலையிலேயே அன்னக்கிளி வெட்டுக்கிளியாக மாறி அவரைக் கொட்டிவிட்டாள்.

(தொடரும்)

* * *



"நான் வழக்கமாக தை மாதத்துக்கு பிறகுதான் வீடு வாடகைக்குக் கொடுப்பது வழக்கம்!"

"ஏனுங்க...."

"மழைகாலத்திலை கொடுத்தால் ஒழுக்கு வீட்டுக்கு அட்வான்ஸ் தர மாட்டாங்களில்லையா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரியார் வழங்கும் சிந்தனைகள்



சத்தியம் என்னும் தாய், ஞானம் என்னும் தந்தை, தருமம் என்னும் சகோதரன், கருணை என்னும் நண்பர், சாந்தி என்னும் மனைவி, பொறுமை என்னும் புதல்வன் இவர்களே நமக்கு உகந்த உறவினர்கள் ஆவர்.

நம்மீது எத்தனையோ பேர்கள் அன்பு செய்கின்றார்கள். தந்தை அன்பு செய்கின்றார், மனைவி அன்பு செய்கின்றாள். மகன் அன்பு செய்கின்றான், உடன் பிறந்தவர்கள் அன்பு செய்கின்றார்கள். ஆனால் நம் தாய் செய்கின்ற அன்பு தான் தலை சிறந்த அன்பு.

### சேது ஸ்நானம்

ஆறு முறை பூமியைச் சுற்றி வருதல் பதினாயிரம் முறை காசியில் குளித்தல், பலநூறு முறை சேது ஸ்நானம் செய்தல் ஆகிய இவற்றில் கிடைக்கும் புண்ணியம் தன் தாயைப் பக்தி பூர்வமாக ஒரு முறை வணங்கினால் கிடைக்கும்.

தவம் செய்ய காட்டுக்குப் போக வேண்டாம். பட்டினிகிடக்க வேண்டாம். தலைகீழாக நிற்க வேண்டாம். வீட்டிலிருந்து கொண்டு மனைவி மக்களுடன் வாழ்ந்து கொண்டே தவம் செய்யலாம். எல்லா நலன்களும் பெறலாம்.

இல்லம் என்ற வண்டிக்குள் கணவன் ஒரு சக்கரம். மனைவி ஒரு சக்கரம். ஒரு சக்கரத்தில் வண்டி ஓடாது இரண்டு சக்கரங்கள் இருந்தால் தான் வண்டி ஓடும்.

இன்பம் என்பது செல்வத்தில் இல்லை. ஒற்றுமையில்தான் இருக்கிறது. ஆகவே கணவனும் மனைவியும் மிக்க ஒற்றுமையோடு இருக்க வேண்டும். மனம் ஒரு கத்தி போன்றது. கத்தி மாம்பழம் நறுக்கவும் உதவும். பிறருடைய தலையை அறுக்கவும் உதவும். அது போல மனம் நன்மையை நினைக்கவும் ஆகும். தீமையை நினைக்கவும் ஆகும். ஆக நன்மை தீமை இந்த இரண்டுக்குமே நமது மனமே மூல காரணம் என்று உணர்க. சுகமாக வாழும் பொழுது துக்கத்தையும் பழகிக் கொள்ளுங்கள். ஏனென்றால் வாழ்வும், தாழ்வும் மனிதனுக்கு மாறி மாறி வரும். உங்களுக்கு கோபம் வரும்பொழுது கண்ணாடியில் உங்கள் முகத்தைப் பாருங்கள். உங்களுக்கே வெட்கமாக இருக்கும். கோபம் தணிந்து விடும்.

### லட்சியம்

வாழ்க்கையில் லட்சியம் வேண்டும். லட்சியம் இல்லாத மனிதன் மிருகத்திற்குச் சமம். படிப்பிருந்தால் மட்டும் போதாது பண்பாடு வேண்டும். பண்பாடு உள்ளவன் தான் மனிதன் எனப்படுவான். சிந்தனை, செயல், பேச்சு மூன்றும் ஒன்று போல் இருக்க வேண்டும். பேச்சு ஒன்று. செயல் ஒன்றாக இருக்கக்கூடாது.

---

**ஒருவர் :** "சாராயத்திலை தண்ணி கலக்கிற வங்க.... கடவுளுக்குச் சமமான வங்க"

**மற்றவர் :** "ஏனுங்க...."

**ஒருவர் :** "எல்லாம் மறந்துட்டீங்க போல மட்டக்களப்பில் விசச் சாராயம் குடிச்சு 100 பேர் செத்தாங்களே"





"நீங்க கதைக்கிறது நியாயம் அற்றது"

"பாலிலை தண்ணி கலந்தாப் பிழையெண்டு சொல்லிறீர்.... கள்ளிலை நீங்கள் தண்ணி விடிறீங்களே... அது குற்றமா இல்லையா"

-ஆதி உத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழுந்து போதெல்லாம் எழுந்து வா!

எழுது,
சாவதற்கு முன்னால்
சரித்திரம் படைப்பேனென்று....

விழும் போதெல்லாம்
எழுந்து வா
கதிரவன் கூட
விழுந்து எழுகிறவன் தான்.

இருளுக்கு பயந்தவனாய்
தூக்கத்தை தொலைக்காதே....

தோல்வி புற்களை
உன் முயற்சி தோட்டத்தில்
களையெடு!

குரல் வளை அறுந்தாலும்
எழுதுகோல் கொண்டு
உரிமைகளுக்காய் மனுவெழுது.

சமூகத்திற்காய்
சமர் செய்.

செந்தீயில் உன் உடல்
சேர்தெரிந்தாலும்
சிந்தையில் இருக்கட்டும்
இனத்தின் எண்ணமூச்சு


எந்தன் மலைநாடென - நீ
இறுமாப்பு கொள்ளும்
போதெல்லாம்
உந்தன் தம்பிகள்
ஓடி வர ஓங்கியிருக்கின்றனர்!

புறப்படு
புதிய மலையகம்
புலரட்டும்.

அடுத்த தலைமுறையின்
கிழக்காவது - ஆனந்தமாய்
உதிக்கட்டும்

**புசல்லாவை கணபதி**

# கவிக் குரல்



உனது எல்லா நாட்களிலும்
தயாராக இரு
எவரையும் சம உணர்வோடு
சந்தி
நீ பட்டறைக் கல்லானால்
அடி தாங்கு
நீ சுத்தியலானால் அடி!

(ஒரு பிரபல்யமாகாத
19ஆம் நூற்றாண்டுக் கவிஞனின்
கவிதை அடியில் இருந்து)



# உழவன்

பூமித்தாயைப் புரட்டிப் புரட்டி
ஏரும் பேனா எடுத்துப் பிடித்து
வியர்வை மையை
ஊற்றி ஊற்றி
உணர்வுக் கவிதை
எழுதும் கவிஞன்!
இவன் உலகப் பசியை
துடைக்கும் கலைஞன்!

# நட்சத்திரம்

எந்தக் கண்ணகி
உடைத்தெறிந்தாள்
நிலவே உந்தன் கால் சிலம்பை
அத்தனையும் வைரங்களாக
சிதறிக்கிடக்கின்றதே – அந்த
வான் பரப்பில்

**ஏறாவூர் - 4, வசந்தன்.**

# கவித்துளிகள்

மது
விற்பகைக்கு
வருமானம்!
குடிப்பவனுக்கு
அவமானம்!

மேற்கோள்!
ஒரு குறிக்கோளோடு
வாழ்!
மற்றவர்களுக்கு
மேற்கோளாக வாழ்வாயா

**வண்ணை தெய்வம்**



# வாழ்க்கை

வாலிபம் என்பது பட்டாடை
வரும் முதுமை என்பது ~பொன்னாடை
ஆத்திரம் என்பது அறியாமை
அன்பே உயிர்களின் அனுசரணை

நேற்றைய முடிவில் பனிமூட்டம்
நாளைய கனவோ கண்ணோட்டம்
ஆண்டவன் என்பது ஆகமமே
அறிவொளி தான் உன் நேர்முகமே

நடந்து முடிந்தது அனுபவமே
நாட்டை காக்கனும் அனுதினமே
புலனை வளர்ப்பது மொழி வளமே
புதுமை தருவது தமிழ்க்களமே

கடனைக் கொடுப்பது கனிவுளமே
கற்பனையில் சிறந்தது கவிமனமே
ஒன்றை இழப்பது தியாகமே
ஒற்றை என்பது வியூகமே

நாட்டுக்கு தேவை அரசாட்சி
நமக்கு தேவை நன்மனசாட்சி
வீட்டுக்கு வீடு மரம் நடு
விண்ணை தொட அதை விடு.

**பா.அஜந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






குரு: "நீ ஞானத்தை தேடிப் போக நேரம் வந்து விட்டது சிஷ்யா...."

சீடன்: "தெரியும் குருவே... நம் ஆசிரமத்து பால்காரி ஞானம் மூன்று நாட்களாக பால் ஊற்ற வரவில்லை அதுதானே குருவே"



சிறுவன் -'' அந்தாளுக்கும் நீர் வாழ் உயிரினங்களுக்கும் ஒரு ஒற்றுமை உண்டு...'' மற்ற சிறுவன் - '' என்ன?''

சிறுவன் - ''அவரும் எப்பவும் தண்ணியில தான் இருப்பார்!''



நோயாளி: "ஒப்பிரேசனுக்குப் பிறகு கண் நல்லாத் தெரியுது டொக்டர்...."

டொக்டர்: "டொக்டர் அங்க இருக்கார் சேர்! நான் நேர்ஸ்..."



நோயாளி: "டாக்டர் என் கையில படைமாதிரி இருக்கு.... ஆனா அரிப்பு, வலி ஒண்டுமில்ல..."

"ஒருவேள இது அமைதிப்படையாயிருக்குமோ"



ஆசிரியர்: "முட்டை இடும் பிராணிகள் இரண்டு சொல்லு...?"

மாணவன்: "கோழி, ஆசிரியர்....."

நன்றி
தினக்குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் சிரிப்பு நவீனம்                (சென்ற இதழ்த் தொடர்ச்சி.....)

# ஆச்சி பயணம் போகிறாள்

– செங்கை ஆழியான்

*ஆச்சி பயணம் போகிறாள் என்ற இந்தச் சிரிப்பு நவீனம் அதிக ஆண்டுகட்கு முன்பு பிரபல்யமான எழுத்தாளர் செங்கை ஆழியனால் எழுதப்பட்டது. புதிய வாசகர்கட்காக சுவைத்திரள் அவரின் அனுமதியுடன் மீண்டும் இந்தத் தொடர் கதையை வெளியிடுகின்றது. (ஆ + ர்)*

றம்புக்கணையில் வந்து நின்ற றெயில் புறப்பட வெகு நேரம் எடுத்தது.

"என்ன பிள்ளை, புறப்படாதுபோல இருக்குது...." என்றாள் ஆச்சி.

"இந்த றெயில் நின்று நின்று மெதுவாகத்தான் போய்ச்சேரும்.... மாமி!..." என்று கூறினாள் செல்வி.

"றம்புக்கணையில் றெயிலுக்குப் பின்னாலையும் ஒரு எஞ்சின் பூட்டுகிறது. ஆச்சி...."

"ஒரு கோச்சிக்கு இரண்டு இஞ்சினோ?.... ஏன் தம்பி?"

"றம்புக்கணையில் இருந்து கண்டிக்குப் போற பாதை வலு ஏற்றம். ஒரு எஞ்சின் சரியாக இழுக்காது. அதனாலை பின்னாலையும் ஒரு எஞ்சினைப் பூட்டித் தள்ளுகிறது.... ஆச்சி!"

றெயிலின் முன் எஞ்சின் கூவியது. பின் எஞ்சின் அதனை ஆமோதித்துக் கூவியது. றெயில் பெருமூச்சை எறிந்தபடி றம்புக்கணையை விட்டுப் புறப்பட்டது. "பிள்ளை" என்று கூப்பிட்டாள் ஆச்சி.

"என்ன மாமி!"

"உங்கடை யூனிவேசிற்றிப் பெடியன்களும் பொடிச்சிகளும் யாழ்ப்பாணத்துக்கு வரேக்கை றெயிலுக்கை கும்மாளம் போடுவியளாமே?"

"அது முந்தித்தான் மாமி' என்று செல்வி, சிவராசாவைத் திரும்பிப் பார்த்தாள்; "குடிச்சுப் போட்டு கூத்தடிப்பினம்!.... பாட்டுப் பாடுவினம்... தூஷணம் பேசுவினம்..."

"எல்லாருமோ....?"

எல்லாருமில்லை, மாமி! சிலர்தான்... சிலர் செய்கிறது எல்லாருக்கும் பழி! அதுக்குள்ளை வெத்திலை தின்னாத நல்ல பிள்ளையளும் இருக்கும், மாமி!"

செல்வி கூறுமுன் சிவராசா குறுக்கிட்டான்.

"அங்கை பாரெணை, பெரிய பள்ளத்தாக்கு....." ஆச்சியின் கவனம் திரும்பியது: ஒரு கணம் பள்ளத்தாக்கையும், மலைகளையும் பார்த்து விட்டுத் திரும்பினாள்.


யூனிவேசிற்றிப் பொடியள்

"பொம்புளைப் பிள்ளையளும் குடிக்கிறவையோ?"

"ஏன் இல்லை, ஆச்சி" என்றான், சிவராசா. "ஏன் இப்படி வீண் பழி சொல்லுறியள்..." "ஏன் நீங்க தண்ணி குடிக்கிறதில்லையோ...?; ஆச்சி பேசினாள். "பேப்பரிலை உங்களைப் பற்றி அடிக்கடி வருகுதுதானே? ஒரே குழப்பம் செய்த படி யாழ்ப்பாணம் வருவினம்.... யூனிவேசிற்றியிலை இருக்கேக்கை உங்களுக்குக் கவலையே தெரிகிறதில்லை. எவ்வளவு கஷ்டப்பட்டு பெத்தவை பணமனுப்புகினம் என்று பலர் யோசிப்பதில்லை. படிச்சுப்போட்டு வந்து வீட்டிலை வேலையில்லாமல் இருக்கிறதையும் நினைக்கிறதில்லை. இவற்றையெல்லாம் யோசித்தால் இப்படியெல்லாம் குழப்படி செய்வினமா?"

"உதையெல்லாம் யோசித்தாலேதான், இங்கையிருக்கும் வரையாவது சந்தோஷமாக இருப்பமென்று கூத்தடிக்கிறான்கள்..." என்றான் சிவராசா.

"இங்கை வாறது உதுக்கே தம்பி, நாளைக்கு உலகத்துக்குப் புத்தி சொல்லப்போறதுகள்... கெட்டுப்போறதுக்கே இங்கை படிக்கவாறது..."

"அவங்கள் ஒருக்காலும் கெடமாட்டார்கள், ஆச்சி! இந்தப் பொம்புளைப் பிள்ளையளையும் இங்கை படிக்க அனுப்புறதாலைதான் கெட்டுப்போறான்கள்...."

செல்விக்குக் கோபம் வந்துவிட்டது.

"உங்களை யாரும் கெடச் சொன்னவையே..? வாயாலை வீணீரை ஊற்றிக்கொண்டு பெட்டையளுக்குப் பின்னாலை திரிகிறது... பிறகு எங்களைத் தூற்றுகிறது...."

"நீங்க சிரிச்சுக் சிரிச்சு எங்கடை நோட்ஸ் எல்லாத்தையும் வாங்கிப்படிச்சுப்போட்டு பாஸ்பண்ண... பெயில் விடுகிறது அவங்கள் தானே?...."

"ஏதோ தெரிஞ்சது போலை, கதையாதையுங்கோ?"

"நான் நாலு வருஷம் அங்கை படிச்சனான்! விளங்குதே!..."

ஆச்சிக்கு மகனதும், மருமகளினதும் சண்டையைப் பார்க்க சுவையாக இருந்தது. "இப்பிடிச் சண்டை போட்டால் எப்பிடித்தான் வாழப்போறியளோ?" "இவர் உப்பிடித்தான், மாமி! பொம்பிளையளை எப்பவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்படிச் சண்டை போட்டால்

குறைவாய்ப் பேசுறது..." "திரியுறது... அவளவைக்குப் பின்னாலை... குறைசொல்லுகிறது அவளவையாளை.." என்று மருமகளுக்குப் பரிந்து வந்தாள் ஆச்சி. "நாங்கள் அப்பிடி ஒருத்திக்கும் பின்னாலையும் திரியவில்லை...." என்றான் சிவராசா.

"ஐயோ, பாவம்... விரலை வைச்சால் கடிக்கத் தெரியாது..." "வைச்சுப் பாரேன்!..." "ஆசைதான்..." என்றால், சொல்வி. அளக்கலையில் ரெயில் வந்து நின்றது.

பேராதனைச் சந்தி ஸ்ரேசனைப் புகையிரதம் அடையும்போது நேரம் காலை எட்டரை.

"ஆச்சி, அடுத்த ஸ்ரேசனில் நாங்க இறங்குவோம்...."

"இதென்ன ஸ்டேசன்....?"

"பேராதனை, மாமி?"

"இது பெரியதொரு புகையிரதச் சந்தி, ஆச்சி. இங்கிருந்து மாத்தளைக்கும், நுவரேலியா, அப்புத்தளை, வதுளை என்பனவற்றுக்கும் புகையிரதப் பாதை போகுது..."

"பேராதனையிலைதானே, நாங்க இறங்க வேண்டும்...?" என்றாள் ஆச்சி. "இங்கையும் இறங்கலாம், மாமி! அடுத்த ஸ்ரேசனில் இறங்கினால், யூனிவேசிற்றி கிட்ட..."

றெயில் புறப்படச் சற்று நேரம் எடுத்தது.

"வடே...வடே....!"

"பார்லி... பார்லி..."

"பத்திரே.... பத்திரே"

வெளியே வியாபாரக் கூச்சல்.

"முதலிலை எங்கை போறது...?"

செல்வி இருக்கிற வீட்டுக்குப் போவம்..."

"பிள்ளைக்கு எப்ப விடு தருவினம்?..." என்றாள், ஆச்சி.

"இரண்டாம் வருஷத்து ஆக்களுக்கு 'ஹோல்' தருகிறதில்லை, மாமி! யூனிவேசிற்றியிலை படிக்க பிள்ளையள் கூடிவிட்டதாலை, முதல் வருஷத்துப் பிள்ளையளுக்கும் கடைசி வருஷத்துப் பிள்ளையளுக்கும்தான் 'ஹோல்' தருவினம்... எனக்கு வாறவருஷம் கிடைக்கும்"

றெயில் புறப்பட்டது. ஒரு பாலத்தின் மீது விரைந்து கடந்தது.

"இதுதான் மகாவலி கங்கை, ஆச்சி! பெரிய நதி... உதுக்குக் குறுக்கேதான் பாலம் போட்டிருக்கினம்."

றெயில் நின்றது

"இறங்கு ஆச்சி!...."

"இந்த ஸ்டேசனுக்கு என்ன பெயர் பிள்ளை?"

"சரசவி உயன, மாமி...."

"சரஸ்வதியோ?.... நல்ல தமிழ்ப் பெயராக இருக்கு?.."

"சரசவி உயன, ஆச்சி! சரசவி என்றால் பல்கலைக் கழகம்... உயன்ன என்றால் பூங்காவனம்... முந்தி நாங்க படிக்கிற காலத்திலை இதுக்கு "நியூ பெரதேனியா" என்று பெயர்... இப்பதான் மாத்தினவை..."

"பேர் மாத்திறதிலை எங்கடை ஆக்கள் வலு கெட்டிக்காரர். பேரை மாத்தி என்ன பிரயோசனம். ஆக்களையும் நிலைமைகளையும் எல்லோ மாத்த வேணும்..."

நல்ல வேளையாகச் சரவி உயன ஸ்ரேசனில் அன்று ஒரு வாடகைக் கார் நின்றது. மூவரும் காரில் ஏறிக் கொண்டனர். ஏறுமுதலே போகுமிடத்தைக் கூறி, எவ்வளவு கூலி வேணும் என்று பேசிக் கொண்டே சிவராசா ஏறினான்.

"ரஜவத்தைக்கா..... இருக்கிறதைக் கொடுங்கோ...? என்றான் டிரைவர்.

"இருக்கிறதைத் தந்திட்டு நாங்க என்ன செய்யிறது... மூன்று ரூபா தாறன்..." காரில் இருக்கும்போது ஆச்சி கேட்டாள்.

"ஏதோ வத்தை என்று சொன்னாய், ராசா! முந்தி வேலணைக்குப் போறது போல வத்தையிலும் போக வேணுமே..."

"ரஜவத்தை மாமி. நான் இருக்கின்ற இடத்துக்குப் பெயர் மாமி!"

"உதென்ன பெரிய கட்டிடமெல்லாம்..... அது தானே யூனிவேசிற்றி..."

"இது சயன்ஸ் புளொக்... உது அருணாசலம் ஹோல்... இது ஜெயத்திலகா ஹோல்... இது விஜயவர்த்தனா ஹோல்... எல்லாத்தையும் ஆறுதலாகப் பாப்பம், மாமி!"

எவ்வளவு பெரிய கட்டிடம். இதையெல்லாம் இந்தக் காட்டுக்கை ஏன் கட்டினவை....?"

"காடோ...?" கலகலவெனச் சிரித்தான் சிவராசா

"வந்த வழியை நினைச்சு இதை காடு என்று நினைச்சுட்டியளணை"

"றெயிலிலை வரேக்கை பார்த்தனே? கொட்டிலும் குடிசையும் தானே இருக்கு...."

"உதிலை... உந்தப் போஸ்ட் பொக்சுக்குப் பக்கத்திலை நிற்பாட்டுங்கோ...." கார் நின்றது.

மூவரும் இறங்கினர்.

ஆச்சி சுற்று முற்றும் பார்த்தாள்.

"எது பிள்ளை, வீடு"

"உந்தப் படிகளாலை ஏறிமேலை போகவேணும், மாமி!..."


"உதென்ன ஊரோ?" என்று முணு முணுத்தாள். ஆச்சி.

-தொடரும்-



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வள்ளுவன் இன்றிருந்தால்...



"'மம்மி' என்பார் 'டடி' என்பார் அன்னவர்கள்
தம் மொழியை இழிவாக்கும் தப்புலிகள்
காண்"


# சந்திரல் பிச்சை



நாட்டிலை பயங்கரவாதம் நடந்தாலும் 7.5 வீதம் பொருளாதாரம் முன்னேறியிருக்கண்டு சொல்றாங்க... உதெல்லாம் வெறும் பொய்.... காலையிலை இருந்து மாலை வரை பிச்சை எடுத்தாலும் ஒரு இறாத்தல் பாணுக்கு மட்டுமட்டாய்த் தான் காசு சேருது.

எச்சில் எலையிலே எறியும் சோத்துக்கு பிச்சைக்காரன் சண்டை இந்த நாட்டிலை எண்டு நாற்பது வருசத்துக்கு முந்திக் கலைஞர் கருணாநிதி பாடினாரு.... அட ஓங் கொப்புறானா.... இப்ப நான் சொல்றன்.... சிலோன் போற போக்கிலை இவர்களுக்குத் தான் அது வரப் போகுது.... வந்திட்டுது.....

# அமெரிக்காவிலும் கனடாவிலும் 'சோ IV' திரைப்படம் வசூல் சாதனை




'சோ IV' (Saw IV) திரைப்படமானது 32.1 மில்லியன் டொலரை வருமானமாக ஈட்டி அமெரிக்கா மற்றும் கனடா திரைப்படவுலகில் வசூல் சாதனை படைத்து ஓடிக்கொண்டிருக்கிறது. 2004ஆம் ஆண்டில் ஆரம்ப 'சோ' திரைப்படம் வெளியானதைத் தொடர்ந்து, ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் 'சோ' திரைப்படத்தின் தொடர்கள் வெளிவருவது வழமையாகவுள்ளது.

புதிதாக வெளிவந்த குடும்ப நகைச்சுவைத் திரைப்படமான 'டான் இன்ரியல் லைப்' ஆனது 12.1 மில்லியன் அமெரிக்க டொலரை வருமானமாக ஈட்டி வசூலில் இரண்டாவது இடத்திலுள்ளது.

அதே சமயம் கடந்த வாரம் வசூல் சாதனையில் முன்னணியிலிருந்த திகிலூட்டும் திரைப்படமான '30 டேய்ஸ் ஒப் நைட்' 6.7 மில்லியன் அமெரிக்க டொலரை வருமானமாக பெற்று மூன்றாம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.

'த கேம் பிளான்' (6.3 மில்லியன் அமெரிக்க டொலர்), 'வை டிட் ஐ கெட் மறீட்' (5.7 மில்லியன் அமெரிக்க டொலர்) ஆகிய திரைப்படங்கள் வசூலில் நான்காம் ஐந்தாம் இடங்களைக் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2008 புலமைப்பரிசில் பரீட்சை

தற்போது தரம் 4 இல் கல்வி பயிலும் மாணவர்களை **2009** புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயார் செய்யும் முகமாக எமது காயத்திரி பப்ளிகேஷனின் வெளியீடுகள்

| | |
|---|---|
| **புலமைப்பேழை - 2008**<br>(36 மாதிரி வினாத்தாள்களும் விடைகளும்) | ரூபா. 180.00 |
| **விடிவெள்ளி - 2008**<br>(40 மாதிரி வினாத்தாள்களும் விடைகளும்) | ரூபா. 185.00 |
| **வெற்றி முரசு - 2008**<br>(40 மாதிரி வினாத்தாள்களும் விடைகளும்) | ரூபா. 170.00 |
| **வெற்றிக்கனி**<br>(1250 பொது அறிவு வினாக்களும் விடைகளும்) | ரூபா. 100.00 |
| **அமுதசுரபி - 2008**<br>(30 மாதிரி வினாத்தாள்களும் விடைகளும்) | ரூபா. 150.00 |
| **மும்மொழி வழிகாட்டி - 01**<br>(தமிழ் ~ சிங்கள ~ ஆங்கில சொற்கள்) | ரூபா. 50.00 |
| **புதையல்** (அடிப்படை விடயங்கள்) | ரூபா. 100.00 |
| **சிங்களம்** | ரூபா. 10.00 |
| **புலமை ஒளி** (திருத்திய பதிப்பு)<br>(மாணவர்களுக்கு அவசியமான விடயங்கள்) | ரூபா. 155.00 |
| **புலமைக் கட்டுரை** | ரூபா. 65.00 |
| **Past Papers** (ஆறுவருட அரச வினாத்தாள்கள்) | ரூபா. 110.00 |
| **புலமை வழிகாட்டி**<br>(கல்விச் சஞ்சிகை) **(ஒரு இதழ்)** | ரூபா. 30.00 |
| **சிங்களம் பயில்வோம் (தரம் 4,5)** | ரூபா. 50.00 |
| **சுற்றாடல் களஞ்சியம் (தரம் 4)** | ரூபா. 120.00 |
| **தமிழ்ச் செயல்நூல் (தரம் 5)**<br>P.P. அந்தோனிப்பிள்ளை | ரூபா. 120.00 |
| **புலமைப் பரிசில் வழிகாட்டி** | ரூபா. 150.00 |
| **Children Essays (தரம் 3,4,5)** | ரூபா. 60.00 |



சுவைத்திரள் சஞ்சிகையின் ஏக வினியோகஸ்தர் காயத்திரி பப்ளிக்கேசனே! சுவைத்திரள் தேவையானோர் காயத்திரி பப்ளிகேசனுடன் தொடர்பு கொள்ளுங்கள்



## காயத்திரி பப்ளிகேசன்

1A, றூபன் பீரிஸ் மாவத்தை,
களுபோவில, தெகிவளை
T.P : 011-2727621

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் படையலும் எமது கடையலும்

(நூல் விமர்சனம்)



கவிஞர் சிவலிங்கத்தின் முகம் காட்டும் முழு நிலா கவிதை நூலில் அவரது கன்னி முயற்சி பெருமளவு வெற்றி பெற்றுள்ளதைக் கண்டு கொள்ள முடிகின்றது. கடவுளரைப் பற்றிப் பாடப்பட்டுள்ள பாடல்கள் யாவும் செய்யுள் வடிவில் அமைந்துள்ளன. ஏனைய பாடல்களில் சிறந்த கவிதைகள் இடம் பெற்றுள்ளன. இவற்றிலேயே அவரது கவிதா உணர்வுகளை நாம் காணலாம். வளமான மட்டுநகர், விண் வெளியில் விலைவாசி, சமாதானப் பூக்கள் எங்கும் பூத்திடும் தியாகி, தாய்மை (அன்னை) போன்றவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். இவற்றில் அவரது அனுபவங்களையும் கவிதா உணர்வினையும் காணமுடிகின்றது.

வளமான மட்டுநகர் என்ற தலைப்பிலான கவிதையில் கவிஞர் சிவலிங்கத்தின் கவி புனையும் ஆற்றலையும் மண்மீதுள்ள பற்றினையும் தெளிவாகக் கண்டு கொள்ள முடிகின்றது.

"ஆழ்கடலில் மீன் பிடிப்பார்
ஆருயிரைத் துச்சமென்று
வாழ்ந்திடுமெம் பெருமக்கள்
வயல் வெளியில் கதிரறுப்பார்"

இவ்வடிகளில் மட்டக்களப்பு மாநிலத்தில் பிரதான தொழில்களான விவசாயம், மீன் பிடி இரண்டினதும் முக்கியத்துவம் எடுத்துக் காட்டப்படுகின்றது. தமிழ் மொழியும் கலைகளும் சிறப்புப் பெற்று வளரும் பாங்கையும் இக் கவிதையிலே நாம் காணலாம்.

விண்வெளியில் விலைவாசி என்ற தலைப்பிலான கவிதையில் "மனைதனில் அடுப்பெதுவு மெரியாது" என வரும் அடிகள் விலைவாசி எந்தளவிற்கு உயர்ந்துள்ளதென்பதை உணரச் செய்கின்றது. 2006ம் ஆண்டு பாடப்பட்ட இக்கவிதையில் கவிஞர் விலைவாசியின் உயர்வு பற்றி இவ்விதம் மனம் புழுங்குவாராயின் தற்போதுள்ள விலையேற்றம் எந்தளவிற்கு அவரைத் தூண்டும் என்பது பற்றிக் கூறத் தேவையில்லை.

அடுத்ததாக இக் கவிதைத் தொகுதியில் அடங்கியுள்ள 'சமாதானப் பூக்கள் எங்கும் பூத்திடும்' எனும் கவிதையை நோக்கின் மிகவும் சிறப்பான ஓசை நயமும், உணர்ச்சிப் பெருக்கும் தெளிவான கருத்தும் அடங்கியிருப்பதைக் காணலாம்.

"யுத்த மொன்று சத்தமிட்டு வந்தது - மத
யானை போன்று நாடழித்துச் சென்றது."

எனச் சொல்லும் கவிதைகளில் யுத்தத்தின் கொடுமை சித்தரிக்கப்பட்டுள்ளது. சமாதானப் பூக்கள் எங்கும் பூத்திட வேண்டும் என்னும் தமது ஆதங்கத்தை கவிஞர் காட்டி நிற்கின்றார். 'தாய்மை' எனும் தலைப்பிலான கவிதையிலும் ஆசிரியரது (கவிஞர்) உள்ளத் தெளிவையும் உணர்ச்சிப் பெருக்கையும் காணமுடிகின்றது. முகம் காட்டும் முழுநிலா கவிதைத் தொகுதியினை ஒட்டு மொத்தமாக எடுத்துப் பார்க்கும் போது நல்ல பல கவிதைகளைக் கவிஞர் படைத்துள்ளதைக் கண்டு கொள்ள முடிகின்றது. கவிஞரின் கன்னி முயற்சியாக இத் தொகுதி யிருப்பினும், இதில் அவரது கவி இயற்றும் ஆர்வத்தையும் கற்பனைச் சக்தியையும் திறந்த உளப்பாங்கினையும் நன்கு கண்டு கொள்ளக் கூடியதாகவுள்ளது. கடவுள் தன் மீது பாடப்பட்டுள்ள பாடல்கள் யாவும் செய்யுள் மரபிற்கேற்ப ஓசை, தளை, சீர், கற்பனை வளம் யாவும் அமையப் பெற்றனவாகவுள்ளன.

செ.எதிர்மன்னசிங்கம்
(முன்னாள் கலாசாரப் பணிப்பாளர்)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RIFKA'S STATIONER'S


Wholesale & Retail dealers in stationery,
All Bags and Etc.

# 179, Main Street, Kattankudy 06.
Tel : 065 2247787.

றிப்கா ஸ்ரேசனேர்ஸ்
179, மெயின் வீதி, காத்தான்குடி
தொ.பே : 0652247787

JK COPIER PHOTOCOPY PAPER
NATARAJ STATIONERY
Camlin
SINAR SPECTRA COLOUR PHOTO COPY PAPER
TNPL PHOTOCOPY PAPER
Apsara

மூன்றெழுத்தில் என் பேச்சிருக்கு
179, மெயின் வீதி காத்தான்குடியில்
எங்கள் கடை இருக்கு!




அணுகுண்டுவிஞ்ஞானியும் அளவுத் திட்டம் இல்லாமல் செயலாற்ற முடியாது. அவர்களைக் கூட வழி நடத்தும் அடிமட்டம் எம்மிடம் விற்பனைக்குண்டு.

---

ஒரு புடவைக்கடையின் இயக்கத்தை கத்தரிக்கோல் களவு போனால் நடத்த முடியாது ஒரு யார் துணியைக் கூட வெட்டவேண்டுமானாலும் கத்தரிக்கோல் தேவை விதம் விதமான கத்தரிக்கோல்கள் எம்மிடம் விற்பனைக்கு உண்டு.



---



எந்த உயர்தரமான அச்சுக்கூடமும் நியூஸ்பிரிண்ட் இல்லாமல் இயங்குமோ? மை இருக்கலாம் மின்சாரம் 24 மணி நேரம் ஓடலாம். ஆனால் நியூஸ் பிரிண்ட், காகிதாதிகள் இல்லாமல், இல்லாது அச்சகம் இயங்காது ஏன் பாடசாலை கூட இயங்காது. அச்சக பாவனைக்கும், பாடசாலைப் பாவனைக்கும் பாவிக்கக் கூடிய போட்டோ கொப்பி பேப்பர்கள் தட்டச்சுக் கடதாசிகள் யாவும் எம்மிடம் உண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும் ஆடர் கொடுப்பின் அவை எல்லாவற்றுக்கும் நாம் சரி என்று சொல்கின்றோம்.

---

பாடசாலை உபகரணங்களில் Natraj தயாரிப்புகள் எம்மிடம் உள்ளன. மகாத்மா காந்தி அவர்கள் தனது வாழ்நாளில் தரமான பென்சில்களையே பாவித்தார். மகாத்மா அவர்கள் பாவித்த தரமான பென்சில்களை. விடவும் அதி தரமான பென்சில்கள் எம்மிடம் விற்பனைக்கு உண்டு.



---



வெளிநாடு பயணமா? உள்நாட்டு உல்லாசப் பயணமா? பாடசாலைத் தேவையா? பெட்டகம் போல் ஒரு Bag வேணுமா? இத்தனை தேவைகட்கும் Bag வேணுமென்றால்.... சாக்..... இவர்களிடம் போனால் விதம் விதமான Bagகுகள் பெற்றுக்கொள்ளலாம். சொல்ல முடிந்தது சில சொல்லாது விட்ட பொருட்கள் பல. ஒரு குடையின் கீழ் பல்வேறு தரமான பொருட்களையும் பெற நாடுங்கள் இன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Sri Devi

## NORTH INDIA SOUTH INDIAN PILGRIMS SERVICE

No.66/2, 3/1, Joseph Dias Mawatha, Colombo – 15.
Tel : 0777-680102, 077-3108724, Fax : 0094-011-2595980.
Indian Tel : 0091-9840390309, 0091-9840672058

**இந்த யாத்திரைகள் அனைத்தும் 05.01.200ம் ஆண்டு காலமான என் மனைவியின் வேண்டுகோளிற்காக சேவை நலன்கொண்டு குறைந்த செலவில் நடாத்தப்படுகின்றது.**

## ஸ்ரீதேவி வடஇந்திய, தென்னிந்திய திருத்தல யாத்திரை சேவை

**எமது யாத்திரைகள் விபரம்**

❀ 5 மாநிலங்களுக்கூடான யாத்திரை. திருப்பதி, சாயிபாபா, 9 நவக்கிரக ஆலயங்கள், பஞ்சபூத திருத்தலங்கள். ஆறுபடை வீடுகள் மேல் மருவத்தூர் உட்பட 70க்கு குறையாத புராதன வரலாற்றுச்சிறப்பு மிக்க ஆலயங்களையும், ஊட்டி, மைசூர், கோடைகானலும் காணலாம். நாட்கள் 28 யாத்திரீகர்கள் 10பேர் மேல் விபரம் கேட்டு அறியவும்.

❀ 4 மாநிலங்களுக்கூடான யாத்திரை திருப்பதி, சாயிபாபா, 9 நவக்கிரக ஆலயங்கள். பஞ்சபூதத்திருத்தலங்கள் ஆறுபடைவீடுகள், மேல் மருத்தூர், மைசூர், ஊட்டி உட்பட 50க்கு குறையாத வரலாற்றுச்சிறப்புள்ள ஆலயங்களும் ஊட்டி மைசூரும் காணலாம். விபரம் கேட்டு அறியவும் 18 நாட்கள் 10 பேர்.

❀ 3 மாநிலக்களுக்கூடான யாத்திரை 30க்கு குறையாத ஆலயங்கள் திருப்பதி 9 நவக்கிரக ஆலயங்கள், பஞ்சபூத திருத்தலங்கள், ஆறுபடைவீடுகள், மேல்வருவத்தூர், சென்னை மரினாபீச், மகாபலிபுரம். நாட்கள் 12. யாத்திரீகர்கள் 10 பேர்.

இது தவிர வட இந்திய யாத்திரையும் வருடம் ஒருதடவை நடாத்தப்படும் விபரம் சுருக்கமாக தரிக்கும் இடங்கள். சென்னை, பூரி புவனேஸ்வர், சோனாராக், கயா, புத்தகயா, காசி, (வாரணாசி) வியாசகாசி அலகபாத். கங்கா, ஜமுனா, சரஸ்வதி, (திருவேணி சங்கமம்) ஹரித்துவார், ரிஷிகேஸ், ஆக்ரா (தாஜ்மகால்) டெல்லி, சென்னை, திருச்சி, மதுரை, இராமேஸ்வரம் இவற்றை தரிசிக்கலாம். நாட்கள் 25 பத்திரிநாத், கேதார்நாத் சேர்த்தால் மேலதிகம் 6 நாட்கள் கூடவரும். அனேகமாக 31 நாள் ஆகும். விருப்பமுடையவர்கள் போனில் தொடர்பு கொண்டு விலாசம் தந்தால் விபரம் அனுப்பிவைக்கப்படும். யாத்திரை ஆரம்பம். ஜூன், ஜூலை மாதங்களில் ஏப்பிரல் மாதத்திற்குள் பதிவு செய்யவும். முழு விபரம் தரப்படும். வெளிநாட்டில் உள்ளவர்கள் விலாசமும் கடவுச்சீட்டு போட்டோக் கொப்பியை மட்டும் Fax செய்து பதிவு செய்யலாம். பின் விபரம் தரப்படும். (Post செய்யப்படும்) நேரே இந்தியா வரலாம். இலங்கை வந்தும் செல்லலாம். விபரம் கேட்டு அறியவும். பின் பதிவு செய்யவும்.



**பின் பதிவு செய்யவும் முழுவிபரங்கட்கு**

**T.ஸ்ரீரெங்கநாதன்,**


T.P :0777680102, 0724222989
Fax 0094112595980, 0094112524921







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாரக் குழறல்







"ஓ இறைவா..... நீ நல்லவனே......
பல்லைக் கொதிக்க வைத்துக் கழற்றச் செய்தாய்! எந்தப் பொய்யனுக்கும் நாக்கைக் கொதிக்க வைக்கவில்லையே."




எங்களிட்டை இருக்கிற மந்திரவாதியள் எல்லாம் சரியான விசருகள்....
நாய்க்கு வாயைக் கட்டுங்கள், பூனைக்குப் பல்லைக் கட்டுங்கள்.... விலைவாசியைக் கட்டத் தெரியாததுகள்.....

-அம்பலத்தடிகள்-


# 45.00 ரூபாய்க் கடை

- 1/2 போத்தல் மண்எண்ணை
- 1 இறாத்தல் பாண்
- தேங்காய்
- 1 பக்கட் உப்பு
- மாங்காய்
- 1/2 கிலோ மா
- 1/2 கிலோ சம்பா
- 1/2 கிலோ புளி
- 20 ஒற்றைக் கொப்பி
- நுளம்புத்திரி (12 மணித்தியாலம் எரியும்)
- சன்லைட்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## குறைகூறிக்குசேலர்



முத்தையா முரளிதரனுக்கு முத்திரை வெளியிட்டுக் கௌரவித்து இருக்கிறாங்களாம்... முத்திரைக்குச் சீல் அடிக்கும் போது முகத்திலை குத்துகிறது சரியாக இல்லை... உண்மையில் கௌரவம் கொடுக்கிறதெண்டா முரளிதரன் படம் போட்டு தாள் காசு அடிச்சிருக்க வேணும்..... விளங்குதோ....

## மிருகங்கள் பேசினால்

என்ன கண்டிட்டு ஓடுறீர்? நான் நிற்கும் காணி உம்முடைய உறுதிக் காணி என்று சொன்னா யாமே? உறுதியைப் பார்க்கத்தான் வந்தனான்!



யானைப் பேச்சு

"என்ன தேடுறீங்க...?"
"அடையாள அட்டையை."
"எங்க போகப் போறீங்க..?"
"அடுத்த வீட்டுக்குத்தான்."



- அதிமணியம் -

# வாசகர் கவிதை

## வாழ்க சுவைத்திரளே!



மத்தில் தயிர் கடைய
வெண்ணெய் திரள்வது போல்
முத்தாம் சுவைத்திரளில்
மதுரச் சுவை திரளும்.

சிந்தை மகிழ்ந்திடவே
சின்னஞ் சிறு கதையையும்
விந்தைத் தொடர்கதையும்
வகையாய்ச் சுமந்து வரும்.

நாட்டுக் கருடனது
நல்ல பதில்கள் சிரிப்
பூட்டும் நகைச் சுவைகள்
பாங்காய்ப் படைத்து வரும்.

விருந்துக்கு இலக்கியங்கள்
விளக்க விமர்சனங்கள்
சிரிக்கச் சித்திரங்கள்
சிறப்பாய்த் தாங்கி வரும்

பார்க்கப் பரவசமாய்
படிக்கப் பழ ரசமாய்
வார்த்த கலைமகளாய்
வாழ்க சுவைத்திரளே.

கவிஞர்: கா.சிவலிங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பழைய பத்திரிகைகளின் காதலர்!

## -பட்டாபிராமன்-

மாதம் நூறு ரூபாய் செலவழித்து பேப்பர் வாங்கினால் மாசக்கடைசியில் அதை விற்றால் பாதி பணமாவது தேறுமா என்று கணக்கு போட்டு பத்திரிகைகளை வாங்குபவர்களுக்கு மத்தியில் பட்டாபிராமன் ரொம்பவே வித்தியாசமானவர். உலகம் முழுவதும் இருந்து வெளிவரும் தமிழ் பத்திரிகைகள் சுமார் 45ஆண்டுகளுக்கும் மேலாகத் தேடித் தேடி சேகரித்து வருகிறார் பட்டாபிராமன்.

பட்டாபிராமனின் சொந்த ஊர் திருச்சி, பொதுப் பணித் துறையில் இன்ஜினியராக இருந்து ஓய்வு பெற்ற பட்டாபிராமன் வீட்டிற்குள் நுழைந்தால் ஹால், படுக்கை அறை என்று எங்கு பார்த்தாலும் பழைய பத்திரிகைகள் காட்சியளிக்கின்றன. தன்னுடைய வித்தியாசமான பொழுது போக்குப் பற்றிப் பேச ஆரம்பிக்கிறார் பட்டாபிராமன்.

"அறந்தாங்கியில் என்னோட மாமா மளிகைக் கடை வெச்சிருந்தார். அவர்ட்ட நிறைய பேர் பழைய பேப்பர்களைக் கொண்டு வந்து போடுவாங்க. அப்ப நான் ஒன்பதாம் வகுப்பு படிச்சிருந்தேன். என்னோட நண்பர்கள் பலர் ஸ்டாம்ப்கள், நாணயங்கள், ரூபாய் நோட்டுக்கள் சேமிக்கிறதைப் பழக்கமா வெச்சிருந் தாங்க. நான் வித்தியாசமா தமிழில் வெளிவரும் பத்திரிகைகளை சேகரிக்க ஆரம்பித்தேன்" என்று பிளாஷ்பேக்குக்கு செல்கிறார் பட்டாபிரான்.

சிதம்பரத்தில் உள்ள அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் சிவில் இன்ஜினியரிங் படித்துக் கொண்டிருந்த பட்டாபிராமன் பழைய நாளிதழ்கள், புத்தகங்கள் சேகரித்து அண்ணாமலை பல்கழைக் கழகத்தில் கண்காட்சியாக வைத்திருக்கிறார். இவருடைய முதல் கண் காட்சியிலேயே 650 தமிழ் பத்திரிகைகள் இடம் பெற்றன. அதன் பின்னர் பட்டாபிராமன் தான் சேகரித்த ஒவ்வொரு பத்திரிகையையும் யார் தொடங்கியது. எங்கிருந்து வெளிவருகிறது போன்ற தகவல்களைச் சேகரித்து அதை ஒரு புத்தகமாகவும் எழுதியிருக்கிறார்.

"என்னுடைய புத்தகத்தில் உள்ள விவரங்களைப் பார்த்த ஹிக்கின்பாதம்ஸ் நிறுவனத்தினர் சுமார் 700 காப்பிகள் வாங்கி உலகம் முழுவதும் உள்ள தமிழ் நூலகங்களுக்கு அனுப்பினர். அதன் பின்னர் 1974ம் ஆண்டு என்னுடைய இரண்டாவது புத்தகக் கண்காட்சி இடம்பெற்றன." என்று நெகிழ்ச்சியோடு சொல்கிறார். பட்டாபிராமன்.

தற்போது இவரிடம் சுமார் 4 ஆயிரத்து ஐநூறு வெளியாகிக்கொண்டிருக்கும் பத்திரிகைகளின் பிரதிகளும் உள்ளன. அதோடு, இவரின் புத்தக சேமிப்பில் மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, அமெரிக்கா, ஜெர்மன், பிரான்ஸ் போன்ற நாடுகளிலிருந்து வெளியாகும் தமிழ் பத்திரிகைகளின் பிரதிகளும் உள்ளன.

"ஒரு முறை நான் கும்பகோணத்தில் இருந்து தஞ்சாவூருக்கு ரயில் வந்து கொண்டிருக்கும் போது எனக்கு அருகில் அமர்ந்திருந்த ஒரு பயணி 'அரவிந்தன்' என்ற பத்திரிகையை படித்துக் கொண்டிருந்தார். அதை வாங்குவதற்காக நான் இறங்க வேண்டிய ஸ்டேஷனில் இறங்காமல் அவரோடயே சென்று வாங்கிட்டு வந்தேன். அதே மாதிரி திருச்சிக்கு போவதற்காக சென்னை ரயில் நிலையத்தில் நின்னுட்டிருந்தேன். டிக்கெட் வாங்கினது போக கையில பணமே இல்ல. ரயில் நிலைய புத்தகக் கடையில் என்னிடம் இல்லாத புத்தகங்கள் சில இருந்தன. கையில் போட்டி ருந்த மோதிரத்தை அடகு வைத்து அந்தப் புத்தகங்களை வாங்கினேன்" என்று பழைய புத்தகங்கள் மேல் தனக்குள்ள காதலை வெளிப் படுத்துகிறார் பட்டாபிராமன்.

இவரின் புத்தகக் காதலை உணர்ந்த இவரின் நண்பர் ஒருவர் தான் லண்டன் சென்றபோது பத்தாண்டு களுக்கு ஒரு முறை மறுபதிப்பு செய்து வெளியிடப்படும் 'Sunderland Daily Echo' என்ற ஆங்கிலப் பத்திரிகையை வாங்கி அன்பளிப்பாக கொடுத்திருக்கிறார்.

20-90-41 இது பட்டாபிராமனின் சேகரிப்பில் உள்ள ஒரு தமிழ் பத்திரிகையின் பெயர். பத்திரிகைகள் தவிர தமிழ் பத்திரிகைகள் குறித்து தமிழில் வெளிவந்த சுமார் 430 நூல்களும் இவரிடம் உள்ளன. அச்சில் வந்த பத்திரிகைகள் மட்டுமல்லாது ஆடியோ, வீடியோ வடிவில் வந்த சில பத்திரிகைகளையும் தன் சேகரிப்பில் வைத்துள்ளார். லயன்ஸ் கிளப்பில் மெம்பராக உள்ள பட்டாபிராமன் மரங்களை வளர்ப்பதிலும் ஆர்வம் காட்டுகின்றார். 'மரமும் அறமும்' என்ற பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்துள்ளார். லயன்ஸ் கிளப்பின் 'மரம் நடும் திட்ட'த்தின் மூலம் மூன்றாண்டுகளில் 11 மாவட்டங்களில் சுமார் 2 லட்சம் மரக்கன்றுகளை நட ஊக்குவித்திருக்கிறார்.

"வரும் ஜுன் மாதம் திருச்சியில் நான் சேகரித்த பத்திரிகைகளை வைத்து கண்காட்சி ஒன்றை நடத்தப் போகிறேன். இந்த கண்காட்சியில் துறை வாரியாக பத்திரிகைகளுடன், ஆடியோ பத்திரிகைகளை கேட்கவும், இன்டர்நெட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகைகளை படிக்கும் வகையிலும் அமைக்கப் போகிறேன். இதன் மூலம் இளைய தலை முறையினருக்கு தமிழ் பத்திரிகை குறித்து நிறைய jftyfs ;fpl fFk;" என்று இளைய தலை முறையினரின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட வராகப் பேசுகிறார் பட்டாபிராமன்.

"இந்தப் பழக்கத்தால் உங்களுக்கு என்ன லாபம், வீடு குப்பை மேடா ஆனதுதான் மிச்சம்னு நிறைய பேர் என்னை திட்றாங்க. இந்த கண்காட்சியின் மூலம் பழைய பத்திரிகைகளின் செய்தி அமைக்கும் முறைகள், அச்சு முறைகள், நாட்டுநடப்புகளை புதிய தலைமுறையினர் தெரிஞ்சுக்கலாம்" என்று தன் பணியை தொடர்ந்து வருகிறார் பட்டாபிராமன்.

-ஷ்யாம்கண்ணன்-

சுவைத்திரள் வாசகர்களே..... இவரின் நோக்கத்தை அடைய நீங்களும் உதவலாம் அல்லவா? உங்களிடம் இருக்கும் பழைய பத்திரிகைகளை இனம் கண்டு அனுப்புங்கள். விரைவில் இவர் நடத்தும் தமிழ் இதழ்கள் கண்காட்சி ஜமால் கல்லூரி கலையரங்கம், திருச்சியில் நடைபெற உள்ளது.

**இவரின் விலாசம்**

திரு.K.பட்டாபிராமன்
ஸ்ரீ கௌரி கம்பியூட்டர்,
53/2 பன்னீர்ச் செல்வம்,
மார்க்கட் றோட்,
சுப்பிரமணிய புரம்,
திருச்சிராப்பள்ளி 620/020
இந்தியா.

## நகைச்சுவை வினா விடை

1. வாழ்க்கையில் நாம் போடக் கூடாத வேஷம் எது?
2. இரும்பின் கையை எவ்வாறு அழைப்பர்?
3. எந்தப் பாலைக் குடிக்க முடியாது?
4. யாருமே தங்க முடியாத சத்திரம் எது?
5. எல்லார் காதிலும் நுழையும் பெயர் என்ன?
6. வெட்டப் பயன்படும் காய் எது?
7. எந்த மையில் நாம் கை வைக்கக்கூடாது?
8. எந்தச் சட்டையை நாம் கழற்றி எறிய வேண்டும்?
9. உருளையாக இருக்கும் கிழங்கு எது?
10. எந்த வசியம் எமது வாழ்க்கையைக் கெடுத்து விடும்?

### விடைகள்.

- துவேஷம்.
- தகரம்.
- மனப்பால்.
- நட்சத்திரம்.
- குச்சி.
- கத்தரிக்காய்.
- உரிமையில்.
- அசட்டை.
- உருளைக்கிழங்கு.
- அனாவசியம்.

கடவுள் : "கருடா! உன்னை நான் அடுத்த பிறவியில் புறொயிலர் கோழியாகப் படைக்கப் போறேன்."



கருடன் : "கருணைக் கடலே! தயவு செய்து அப்படிச் செய்து விடாதீர்கள் ஐயா. பிறந்து 40 நாட்கள் முடியும் முன்னே என் கதையை முடித்து விடுவார்கள் இந்தப் பழாய்ப் போன மனிதர்கள்."



இரத்தினக்கல்லு வியாபாரி என்ன சொல்றான்....

புஸ்பராகம் கல்லுப் போலை பெறுமதியான தாய் தனக்கு வாய்க்கவில்லை என்று சொன்னான்.

~அம்பலத்தடிகள்~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இலக்கியத்தில் சிரித்திரன் காலம் என்பது சுவைத்திரளின் ஒரு புதிய பகுதியாகும். 1965ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நகைச்சுவை ஏட்டின் சரித்திரத்தை எதிர்கால வாசகர்கள் அறிவதற்காகவே இந்தச் சரித்திரத்தை நாம் சொல்ல விழைகின்றோம். தமிழ் இலக்கியத்தில் மணிக்கொடிக் காலம், சரஸ்வதி காலம் என்ற இலக்கியக் கால வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட பல நூல்கள் வெளிவந்து இருக்கின்றன. அதனைப் போல ஈழத்தின் கலை இலக்கிய வரலாற்றில் புதுமையைப் படைத்து புழுதி படர்ந்த மண்ணில் இலட்சியத்தைப் புகுத்திய ஒரு வரலாற்றினை இந்த இதழில் இருந்து சொல்ல முற்படுகின்றேன்.

எமது ஆய்வில் சிரித்திரன் நகைச்சுவைச் சஞ்சிகையின் முதலாவது இதழ் கிடைக்கவில்லை எனக்குக் கிடைக்கப்பெற்ற ஆதாரங்களின் அடிப்படையில் இரண்டாவது இதழின் முதலாம் பக்கத்தைப் பிரசுரிக்கின்றோம். சிரித்திரன் எவ்வாறு தனது நகைச்சுவையைத் தொடங்கியது என்பதற்கான ஆதாரம் இதுவாகும்.

- தொடர் கட்டுரை - திக்கவயல்

# இலக்கியத்தில் சிரித்திரன் காலம்

## (1963 ~ 1992)




இக்காலப் பகுதியில் நகைச்சுவை எழுத்துக்களை முன்னோடிகளிடம் இருந்து பெற்றுப் பல கட்டுரைகள் எழுதப்பட்டன. அவற்றில் விழிபேர்ந்த மொழி பெயர்ப்பாளர் என்ற கட்டுரையைக் கீழே தருகின்றேன்.

### விழிபேர்ந்த மொழிபெயர்ப்பாளர்

ஆறுமுகநாவலர் ஒரு சமயம் ஒரு வழக்கிற்குச் சாட்சி சொல்வதற்காகக் கூண்டில் வந்து நின்றார். நீதிபதி ஓர் ஆங்கிலேயர். அவர் நாவலரின் திருநீற்றுப் பூச்சினையும் உடையையும் பார்த்து விட்டு இவர் ஒரு படிப்பு வாசனை இல்லாத பட்டிக்காட்டான் என எண்ணிக் கொண்டார். நீதிபதி கேட்ட கேள்விக்கு ஆறுமுகநாவலர் ஆங்கிலத்திலேயே பதில் கூறினார். நீதிபதி நாவலரை அலட்சியமாகப் பார்த்து அவரை அவரது தாய் மொழியிலேயே பதில் சொல்லச் சொல்லுமாறு கூறினார். அதைக்கேட்ட ஆறுமுகநாவலர் அவமானமடைந்து விட்டார். பின்பு தமிழிலேயே கேள்விகள் கேட்கப்பட்டன. "உமக்கு இந்த வழக்கைப் பற்றி என்ன தெரியும்" என்று நீதிபதி கேட்டார்.

"அஞ்ஞான்று எல்லிஎழ நானாளிப் போதின்வாய்
ஆழிவரம் பணித்தே காலேற்றுக் காலோட்டப் புக்குழி"

என்று நிறுத்தி அதை மொழிபெயர்த்துக் கூறும்படி மொழிபெயர்ப்பாளருக்கு நீதிபதி கூறினார். மொழிபெயர்ப்பாளர் அதை மொழிபெயர்க்க முடியாமல் திருதிருவென்று முழித்தார்.
"அது எனக்குப் புரியவில்லை" (மொழிபெயர்ப்பாளர்)
"அவர் பேசுவது தமிழ்தானே" (நீதிபதி)
"ஆம்" (மொழிபெயர்பாளர்) "நீரும் தமிழர் தானே ஏன் புரியவில்லை" (நீதிபதி) அவர் பேசுவது கடினமாக இருக்கிறது. இந்தச் சமயம் அங்கே உதவிப் பப்ளிக் பிரசிகியூட்டராக இருந்த ஒருவர் வந்தார். அவர் நாவலரின் பழைய மாணவர் அவரைக் கண்டவுடன் நாவலர் "டேய்.... மயில்வாகனம்.... இங்கே வா..... நான் சொல்லுவதை மொழி பெயர்த்துச் சொல் என்றார். அந்த மயில்வாகனம் நாவலருக்குக் காட்டிய மரியாதையைக் கண்ட நீதிபதி வியப்படைந்தார். பின்னரே நாவலர் பைபிளை மொழிபெயர்த்தவர் என்பதையும் அறிந்து நாவலரை ஆங்கிலத்தில் சாட்சி சொல்லும்படி கேட்டார். நாவலர் மறுத்துத் தமிழிலேயே கூறினார். மயில்வாகனம் அதனை மொழிபெயர்த்துக் கூறினார்.

(நாடோடி)

இக்கால கட்டத்தில் சிரித்திரன் சுந்தரால் வெளியிடப்பட்ட சில சிந்தனைகள் கார்ட்டூனாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெளியிடப்பட்டன. அதில் பாலியல் பலவீனம் ஒன்று விரசம் இல்லாது இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த ஆரம்பகாலத்திலே சிரித்திரனின் அட்டைப்படங்கள் எவ்வாறு வெளிவந்தன என்பதற்கு மேலே உள்ள அட்டைப்படம் நல்ல உதாரணமாக விளங்குகின்றது. 1965ம் ஆண்டுப் பகுதியில் சிரித்திரனில் ஆரம்பகால எழுத்தாளர்களாக இருந்தவர்கள் அமிர்தம் மாஸ்டர் சிவலிங்கம் அ.ந.கந்தசாமி சில்லையூர் செல்வராசன் (கவிஞர்) போன்றோர்களே. கீழேயுள்ள பகுதியான அரோகரா.... என்ற சிந்தனைப் பகுதி கீழே காணப்படுகின்றது.

**அரோகரா...!**

வாழ்விலே நிம்மதி இல்லாதவனாகக் கதிர்காமம் சென்றேன். இரவு நேரத்தில் பலரும் உறங்கும் மடப்பள்ளிக்குள் எனக்குமொரு இடம் தேடினேன். அப்படியும் இப்படியுமாக மூவர் உறங்கிக்கொண்டிருந்தார்கள். முதல் மனிதர் முழுக்கால் சட்டையுடனும், இரண்டாவது மனிதர் அரைக்கால்சட்டையுடனும் மூன்றாவது மனிதர் அரைமுழ வேட்டியுடனும் காணப்பட்டார்கள். அவர்களது உறக்கத்தைக் கெடுக்காதவண்ணம் மெதுவாக நானும் ஒரு மூலையில் சுருண்டுகொண்டேன். நானும் அயர்ந்து உறங்கும் நேரமென, அம்மூவரின் குரலோசைகள் கேட்டன. நிமிர்ந்து பார்த்தேன். உறக்கத்தில் புலம்பிக்கொண்டிருந்தார்கள் கூர்ந்து கவனித்தேன்.

முழுச்சட்டை அணிந்தவர்: "தலையிடியா...? வயிற்றுக்குத்தா....? தலைச்சுற்றா....? வெட்டுக்காயமா....? ஆபத்தா....? இறந்துவிட்டாரா....?" இப்படியான கேள்விகளைக் கேட்டுப் புலம்பிக்கொண்டிருந்தார். இவர் ஒரு டாக்டர் என்பதைப் புரிந்து கொண்டேன்.

அரைக்கால்சட்டை : "1கடகம் சீமேந்து, 2 கடகம் மணல், 4 கடகம் சல்லி, 1/2 இஞ்சிக் கம்பி, பத்தையை வெட்டு, பள்ளத்தை நிரப்பு" இவர் ஒரு எஞ்சினியர் என்பதைப் புரிந்து கொண்டேன்.

அரைமுழம் வேட்டி: அம்மயில் அழகாக ஆடுகின்றது. இக்குயில் இனிமையாகக் கூவுகின்றது. தென்றல் குளிர்மையாக வீசுகின்றது. சோலையிலே மலர்கள், சாலையிலே பெண்கள், கோளையிலே கூள், எல்லாம் இன்பம்... இவர் ஒரு சாதாரன மனிதர் என்பதையும் புரிந்த வண்ணம் மீண்டும் உறங்கலானேன்.


உறக்கத்தில் புலம்பிய மூவரது தலைகளும் துண்டிக்கப்பட்டு என் பார்வைக்கு வைக்கப்பட்டன. அதனையடுத்து என் கையிலே ஓர் மாயக் கண்ணாடி தரப்பட்டது. அதனூடாக அத்தலைகளைப் பார்க்கும்படி கேட்கப்பட்டேன். டாக்டரின் மூளை தெரிந்தது. உற்று நோக்கினேன். நோயாளிகளின் தோற்றமும், தீராத வியாதிகளும், படுகாயங்களும், பயங்கர ஆயுதங்களுமாகக் காட்சியளித்தன.

என்ஜினியரின் தலையைப் பார்த்தேன். கல்லும், மண்ணும், கம்பிகளும், மரக்குத்திகளுமாக நிறைந்து இருக்கக் கண்டேன்.

சாதாரண மனிதரின் தலையைப் பார்த்தேன். அழகுப்பொருட்களும், இனிமையான எண்ணங்களும், அமைதியான வாழ்வுமாக அமைந்திருந்தது. அரோகரா....! என்ற ஓசை கேட்டுத் திடுக்கிட்டு விழித்தேன். முழுக்கால் சட்டையும், அரைக்கால் சட்டையும் குறட்டை விட்டுத் தூங்கிக்கொண்டே இருந்தார்கள். அரைமுள வேட்டி பக்தர் கூட்டத்தோடு சேர்ந்து அரோகரா என்று சத்தமிட்டுக் கொண்டிருந்தார். நானும் அவ்விடம் சென்று கொண்டேன். அரோகரா.....! அரோகரா.....!

~அமிர்தம்~

(தொடரும்)




**கிழவி :~** என்ன மோனை கராட்டியிலை பிளக் பெல்ட் தந்தாங்களாமே அதைத் தாவன் அரையிலை கட்ட

**வாலிபன் :** ???!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்பாராத விதமாய் எதுவும் நடக்கலாம்

## அப்படியானால்!

## நம்மில் தங்கி வாழ்வோரின் நிலை! ?

## ஆலோசனைக்கு

காப்புறுதி துறையில் சர்வதேச விருதுகள் பெற்று பல ஆண்டு காலம் நல்ல சேவையை வழங்கிவரும் குழுவினரை நாடுங்கள் உங்கள் தேவை,

- **பாதுகாப்பா?**
- **பிள்ளை செல்வத்தின் எதிர்காலக் கல்வியா?**
- **சேமிப்பா?**
- **முதலீடா?**
- **ஓய்வூதியமா?**
- **காப்புறுதி துறையில் வேலை வாய்ப்பா?**

எவ்வாறாயினும் நல்லதோர் திட்டத்தை வடிவமைத்து அதனை வெற்றி பெறும் மட்டும் உங்களுடன் தொடர்ந்து செய்யப்படும் திரு. S. பத்மநாதன் குழுவினரை அணுகுங்கள்.

தொடர்புக்கு
S. பத்மநாதன்

T.P : 0776704290
0652224565
Fax : 065.2224574
இன்சுரன்ஸ் PLC
219, திருமலை வீதி,
மட்டக்களப்பு

**எத்திறமான நூல்களாயினும் அத்திறமான நூல்கள் இருக்குமிடம் பூபாலசிங்கம் புத்தகசாலையே!**

செட்டியார் தெரு, கொழும்பு 11ல், காலிறோட் வெள்ளவத்தையில் ஆஸ்பத்திரிறோட் யாழ்ப்பாணத்தில்

✷வாசகர்கட்காக அறிஞர்கட்காக நாம் கடை திறந்திருக்கிறோம்..... ஞாபகம் வைத்திருங்கள்? நீங்கள் எங்கும் போகலாம் வரலாம். ஆனால். வியக்கத்தக்க. சுவைக்கத்தக்கத் பாடசாலை மாணவர்கள் சம்பந்தமாக ஆய்வுக்குத் தக்க நூல்களின் முடிவு பூபாலசிங்கம் புத்தகசாலையில் தான் முடிவடைகின்றது.

✷மா. பலா. வாழை என்பன முக்கனிகள். முக்கனிகள் போன்று மூன்று இடங்களில் நாம் இருக்கின்றோம். அன்று தொட்டு இன்று வரை தமிழ் நூல்களின் பெட்டகமாக விளங்கும் எம்மை மூன்றிடங்களில் தேடுங்கள்.

✷நாங்கள் உங்களுக்காகப் பின்வரும் இடங்களில் பல்சுவை நூல்கள் வழங்கக் காத்திருக்கின்றோம். **காட்டின் ராஜா சிங்கமே,**

**நல்ல நூல்களின் ராஜா பூபாலசிங்கம்**

## பூபாலசிங்கம் புத்தகசாலை

| தலைமைச்செயலகம் | வெள்ளவத்தை | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 340,202,செட்டியார்தெரு<br>கொழும்பு-11<br>T.P : 2422321<br>Fax : 2327313 | 309A, 2/3, காலிவீதி,<br>கொழும்பு- 06<br>T.P : 4-515775<br>2504266 | 4A, ஆஸ்பத்திரி வீதி,<br>பஸ் நிலையம்,<br>யாழ்ப்பாணம். |


பூபாலசிங்கம்
புத்தகசாலை
340,202,
செட்டியார் தெரு,
கொழும்பு- 11



இத்தனை புதுமையான பூபாலசிங்கம் புத்தக சாலையில் தலைநகரில் வெளிவராது மட்டக்களப்புத் தமிழகத்தில் இருந்து வெளிவரும் உலக நகைச்சுவை ஏடாம் சுவைத்திரளும் விற்பனைக்காகக் காத்திருக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வள்ளுவன் இன்றிருந்தால்...



இந்திராகாந்தி போல் இல்லையப்பா பிரணாமுகர்ஜி
இந்தியாவும் இழந்ததுவே காண்.



உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்திருந்தால்
பழுத்திராதே பாண் விலை ஐம்பதுவே.



முழு நாடும் சாவீடு கொண்டாடித் தோற்றபின்பு
அழுகுரலில் சமாதானமோடா சொல்.



சமாதானம் பேசல், அது தோற்றால் பெட்டி கட்டல்
அவதானம் இல்லா அன்னியத் தொழில்.



இணையத்தில் பேசுகின்ற திருமணங்கள் ஏமாற்று;
பணையக் கைதி போல் இருந்தவாறு.

வடக்கிருந்த பக்கத்தை நம்பி இருந்ததனால்
வந்ததுவே வாழ்நாள் சிறை.

ராடாரும் குண்டுகளும் கொடுத்திங்கு ஏவி விட்டால்
போடாரோ 'பொடார்' என்ற குண்டு.


மாதா மாதம் வெளிவந்து
கொண்டிருக்கும் சுவைத்திரள்
நகைச்சுவைச் சஞ்சிகையினை
வினியோகம் செய்வதற்கு
யாழ்ப்பாணத்தில் ஒருவர் தேவை.

விண்ணப்பிக்குக.

இல. 28/5,
அம்பாள் லேன்,
மட்டக்களப்பு.
தொ.பே : 0652227274

சஞ்சிகை விமானத்தில் அனுப்பப்படும்.


**ஒருவர் :** "வெளிநாட்டுக்குப் போனா நரக வாழ்க்கை...
அடுத்த வீட்டோடை தொடர்பிருக்காது...."

**மற்றவர் :** "ஹாய்... ஹாய்... நல்லாச் சொன்னீங்க...
இங்க மாத்திரம் என்னவாம் இப்ப...."





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலத் திருமண விளம்பரம்



எமது ஒரேயொரு மகளுக்கு மணமகன் தேவை.
மணமகன் திடகாத்திரமானவராகவும், நீரிழிவு நோய் இல்லாதவராகவும் இருக்க வேண்டும். நீரிழிவு நோய் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்; இருப்பினும் பரம்பரையில் நீரிழிவு நோய் இருந்ததாகப் பதிவுகள் காட்டக்கூடாது. இவ்வாறு பரம்பரையில் நீரிழிவு இருக்குமாயின் பேசிய சீதனத்தில் 50%மே வழங்க முடியும்.

– பெண் வீட்டார் –

# மூக்கண்ணா போதனைகள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிரிப்பு மேடை

கா. சிவலிங்கம்

**பெரியவர் :** மனே, அப்பா எங்கடா?

**சிறுவன் :** அவர் சிறைச்சாலையில.

**பெரியவர் :** ஐயோ தம்பி! அவர் ஒரு நல்ல மனிசனே டாப்பா என்னடா தம்பி நடந்தது.

**சிறுவன் :** ஒண்டும் நடக்கல்ல பெரியவர். அவர் அங்கதான் வேலை செய்யிறார்.



**பக்தர் :** பொன்னார் மேனியனே...... தோலை யரைக்கசைத்து......

**பூசகர் :** ஏன் தேவாரத்தில ஒரு சொல்ல விட்டுற்றுப் பாடுறார்.

**மற்றவர் :** றோட்டில ஆமிக்காரன் நிக்கிறான் ஐயா. அந்தச் சொல்லச் சேர்த்துப் படிச்சா அவர்ர தோலைத்தான் வந்து உரிப்பான்.





**பெரியவர் :** தம்பி இது விற்ற மீனா?

**வியாபாரி :** இல்ல பெரியவர் இது வாங்கின மீன். இனித் தான் விற்கப் போறன். வேணுமா?

**பெரியவர் :** ஆஸ்பத்திரியில டாகுத்தர் விற்ற மீன் தான் வாங்கிச் சாப்பிடச் சொன்னார் தம்பி.



**ஆசிரியர் :** கணவன் மனைவியை விவகாரத் துச் செய்தான். இது எத்தனையாம் வேற்றுமை?

**மாணவன் :** ரெண்டும் வேற்றுமை சேர்.

**அண்ணன் :** தம்பி கேற்றடியில நிக்கிற மனிசனப் போகச் சொல்லு.

**தம்பி :** (ஆங்கிலத்தில்) Man go, Man go (மாங்கோ)

**பக்கத்து வீட்டுப் பெண் :** அந்த மாம்பழக்காராள நிக்கச் சொல்லுங்க மாம்பழம் வாங்குவம்.



**புவியியல் ஆசிரியர் :** சூரியகிரகணம் எப்படி உண்டாகிறது?

**மாணவன் :** சூரியனப் பாம்பு விழுங்குவதால உண்டாகுது சேர்

**புவியியல் ஆசிரியர் :** ஆ....? இத யார் சொல்லித் தந்தது?

**மாணவன் :** சமயம் படிக்கிற சேர் சொல்லித்தந்தார் சேர்.





**லெட்சுமி :** 22 கரட்டில மாலை வாங்கிற்று வரச் சொல்லி இவரிட்டச் சொன்னனடி.

**சரஸ்வதி :** ஆ! வாங்கிற்று வந்தாரா?

**லெட்சுமி :** இல்லையேடி. 22 கரட் கிழங்க வாங்கிக் கோர்த்து மாலையாக் கொண்டு வந்தாருடி.



**ரவி :** டேய் ட்ரைவிங் லைசென்ஸ் எடுக்க வேண்டுமெண்டு சொன்னாயே எடுத்திற்றாயா?

**புவி :** அதால வந்ததுதானேடா இந்த மாராயம். அவன் எட்டுப்போடச் சொன்னான். அதால நான் கையில பத்துப் போட்டுத்து வந்திருக்கன்டா.



**சீலா :** என்னடி, அவர் மூட்டையோட திரிகிறார் எண்டு சொன்னா. பாத்தாவெறும் ஆளா வாராரே.



**லீலா :** இல்லடி அவர்ர தலையில பேனுக்குப் பதிலா மூட்ட குடித்தனம் நடத்துதடி.



**ஒருவர் :** உனக்கு அறையிற அறையில உன்ர 32 பல்லும் கொட்டுப்படும்.

**மற்றவர் :** ஐயோ, அறைஞ்சிராதீங்க ஐயா, இந்தாங்க என்ர கட்டுப்பல் எல்லாத்தையும் நீங்களே வச்சுக் கொள்ளுங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள்
கவலைகள் இல்லை ஒத்துக்கொள்.

வாகனம் ஓட்டக் கற்றுக்கொள், வளமான
வாழ்வு வாழலாம் ஏற்றுக்கொள்.

➜எல்லோரும் வாகனம் ஓட்டலாம் ஆனால் சரியான வழி முறை ஊடாக வாகனம் ஓட்டக் கற்பதே உன்னதமான வழிக்கல்வி.

➜மட்டக்களப்பில் வாகனம் ஓட்டக் கற்க வேண்டுமா?



நாடுங்கள் ........
வாருங்கள் ஐங்கரன் லேனர்ஸ்

இல.61,புகையிரத நிலையக் குறுக்கு வீதி, மட்டக்களப்பு.

தொலைபேசி இல : 060 2650608 கையடக்க தொ.பே.இல : 0773138372

பெண்களுக்கு வாகன ஓட்டப் பயிற்சிகள் அவதானமாகவும், பொறுப்புடனும் பயிற்று விக்கப்படும்.

எம்மால் பயிற்றுவிக்கப்படும் வாகனப் பயிற்சியாளர்கட்கு ஓய்வு பெற்ற வீதிப்பரிசோதகர்களால் பயிற்சி நடத்தப்படும்.

யாரும் வாகனம் ஓட்டலாம் ஆனால் ஆபத்தும், விபத்தும் இன்றி எந்தரக வாகனத்தையும் ஓட்டுபவன் எவனோ அவனே சமுதாயத்தின் காவலன்.இவர்களால் ஓட்டப் பழக்கப்படும் வாகனங்கள்

➩கனரக வாகனங்கள். ➩பாரமற்ற வாகனங்கள் ➩ஆட்டோ .➩மோட்டார் வாகனங்கள்.

அதுபோல ஓய்வு பெற்ற பொறியியலாளர்களால் மெக்கானிக் பயிற்சியுடன், லைசன்ஸ் பெற்றுத்தர உதவி செய்கின்றோம்.



தொடர்புகள்.....

ஐங்கரன் லேனர்ஸ்

இல.61, புகையிரத நிலையக் குறுக்கு வீதி,
மட்டக்களப்பு.

தொ.பே.இல : 0602650608




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்ட்ரல் எசன்ஸ் சப்ளையர்ஸ்
## 76B, கிங்ஸ் வீதி, கண்டி

எசன்ஸ் எல்லாம் எசன்ஸ் அல்ல!

கிங்ஸ் வீதியில், கண்டியில் விற்பனையாகிறது சுவை மிகுந்த எசன்ஸ் வகைகள்!

கனி இருக்கக் காய் வாங்கும் வாடிக்கையாளர்களே.....

சுவை மிகுந்த எசன்ஸ் வகைகட்கு நாடுங்கள்!

சென்ட்ரல் எசன்ஸ் சப்ளையர்ஸ்
76B, கிங்ஸ் வீதி, கண்டி.
தொலைபேசி : 081-2224187

**Central Essence Suppliers**
**76B, Central Road.**
**Kandy.**
**T.P : 081-2224187**

# அதிர்ஷ்டம்

**எது மாதிரியும் இல்லாத புது மாதிரியாக அதிர்ஷ்ட நியூமராலஜி விஞ்ஞான முறையால் நிரந்தர அதிர்ஷ்ட சாலியாக வாழலாம். விபரங்களுக்கு நேரில் அல்லது தொலைபேசி மூலமும் தொடர்பு கொள்ளலாம். தபால்மூல சேவையும் உண்டு. 49 வருட ஆராய்ச்சியும் அனுபவமும் உள்ள அதிநவீன மனோதத்துவ நியூமராலஜி நிபுணர்**

**பேராசிரியர். டாக்டர் .ரசூல் மன்சூர்**

Prof.Dr.Razul Manzurr,
No.198/2/A,
Hill Street, Dehiwala.
Tel: 071-4136254, 078 – 5118019,
0714 182713, (060) 2172645.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பம் எங்கே? இன்பம் எங்கே என்று தேடு. அது எங்கிருந்தபோதும் அதை நாடி விடு.
அறிவு தரும் இன்பமே உண்மையான இன்பம்! தலைநகர் கொழும்பில்
இலை மறை காயாக இல்லாது.தமிழ் இன்பம் அளிக்கும் பொத்தகசாலை
சேமமடு பொத்தகசாலை.



கொழும்பில்
தலைசிறந்த
பொத்தக சாலை எது?

சேமமடு பொத்தகசாலை
U.C.52, பீப்பிள்ஸ் பார்க்,
கொழும்பு-11, ஸ்ரீலங்கா.



**பாலர் தொடங்கிப் பல்கலைக்கழகம் வரையான நூல்களை ஏற்றுமதியும், இறக்குமதியும் செய்பவர்கள் இவர்கள்!**

**தொலைபேசி :** 011-2472362, 011-2321905
**தொலைநகல் :** 011-2448624

**இலங்கையில் நூல்கள் வினியோகம், விற்பனை ஏற்றுமதி, இறக்குமதி, பதிப்புத்துறையில் புதியதோர் சகாப்தம் அன்புடன் அழைக்கிறது!**

CB சேமமடு பொத்தகசாலை



**CHEMAMADU BOOK CENTRE**
**U.G 49/50, Peoples Park Colombo 11**
**Srilanka.**

**தமிழ் நாட்டில் பதிப்புத்துறை விற்பனைத் துறை முன்னோடிகள்**
**இவர்களின் முகவர்கள்**

- **க.சச்சிதானந்தன்** - காந்தளகம், சென்னை 02, தொலைபேசி 044 28414505
- **கோ. இளவழகன்** - தமிழ்மண் பதிப்பகம், சென்னை-17, தொலைபேசி 044 24339030

- பாலர் தொடங்கிப் பல்கலைக்கழகம் வரை நூல்கள் விற்பவர்கள் இவர்கள்.
- சமீபத்தில் யாழ்ப்பாண அகராதியைப் பதிப்பித்துத் தமிழ் உலகிற்கு வழங்கிய துணிவு மிக்கவர்கள் இவர்கள் உங்களுக்குத் தேவையான அத்தனை நூல்களும் மொத்தாமாகக் கிடைக்கும் ஒரே இடம்!

# சேமமடு பொத்தகசாலை

**U.G.49,50, பீப்பிள்ஸ் பார்க், கொழும்பு - 11**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org